Registered as a News paper | பக்கங்கள் 10 | விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு | மக்கள் நாளிதழ்

Eezhanatham

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | தை 23 | 05.02.2005 சனிக்கிழமை | ஓசை 239

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

## அறுவடைத் தொழிலாளர்களை தேடிச்சென்ற ஏறாவூர் இளைஞர் காணாமல் போயுள்ளார்.

(நமது நிருபர்)

அறுவடைத் தொழிலாளர்களை தேடி வெலிக்கந்தைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இவர் தேசவிரோதக் கும்பலால் அல்லது சிறிலங்காப் படைப்புலனாய்வு பிரிவினரால் கடத்தப்பட்டிருப்பதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் 5ம் குறிச்சியைச் சேர்ந்த நல்லதம்பி சிறிக்காந் (26) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளவராவார்.

கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான மேற்படி நபர் ஏறாவூரில் கணனிப் பிரிவு ஒன்றை நடத்திவருபவர் என்றும் கரடியனாற்று பள்ளத்துசேனையில் பத்து ஏக்கர் வயல் வேளாண்மை செய்துள்ளதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

தற்போது பெரும்போக அறுவடைக்கான அருவிவெட்டும் தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக வெலிக்கந்தைப் பகுதிக்கு சென்ற போதே காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தேச விரோதக் கும்பலால் இளைஞர் சுட்டுக்கொலை

(நமது நிருபர்)

கிரானில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் சின்னத்துரை தேவதாசன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரது சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டு நேற்று மாலை உறவினர்களால் எடுத்துச் செல்லப்பட்டது. தேசவிரோதக் கும்பலே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றன.

# நிவாரணத்தில் அரசு புறக்கணிப்பு

# அம்பாறை மாவட்டத்தில் போர்க்கொடி!

(யூ.எல்.எம்.பைஸர் சாய்ந்தமருது, அஸ்லம் எஸ். மௌலானா், றிஸ்வானுல் ஜன்னா நிருபர்கள்)

**சுனாமி அனர்த்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட த்தின் கரையோர முஸ்லிம் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று ஜும்ஆத் தொழுகையின் பின்பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.**

மாளிகைக்காடு, சாய்ந்தமருது, நிந்தவூர் முதலான பிரதேசங்களில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டங்களில் ஆழிப்பேரலைப் பாதிப்புக்குள்ளான அகதிகள், மீனவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

சுனாமி ஏற்பட்டு நேற்றுவரை 41 தினங்கள் கழிந்தும் நிவாரணம் மற்றும் புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளில் முஸ்லிம் பிரதேசங்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்கி உருப்படியாக எதனையும் செய்யவில்லை என விசனம் தெரிவித்தே இந்த பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

நேற்று கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, நிந்தவூர் முதலான பிரதேச

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



## கல்முனையில் நிவாரணம் வழங்கிய பெண் போராளி மீது அதிரடிப்படை தாக்க முயற்சி

(நமது நிருபர்)

கல்முனை பாத்திமா கல்லூரி அகதி முகாமில் பொது மக்களுக்கான நிவாரணப் பொருட்களை வழங்கிய பெண் போராளி ஒருவர் மீது சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்த முனைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தின் போது பொது மக்கள் குறுக்கிட்டு அதிரடிப்படையினரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளோடு இணைந்து நிவாரண பகிர்வுப் பணியில் ஈடுபட்ட ஒரு பெண்மணியை விசேட அதிரடிப்படையினர் தகாத வார்த்தைப் பிரயோகங்களால் பேசியதுடன் துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளதாகவும் பொதுமக்கள்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## மட்டு நகரிலும் சுதந்திர தின நிகழ்வில்லை பெயருக்கு கச்சேரியில் கொடி

(நமது நிருபர்)

சிறிலங்காவின் சுதந்திர தின நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் துக்க தினமாக அனுட்டிக்கப்பட்டது

சில கிராமங்களில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்ததோடு ஆங்காங்கே கறுப்பு, வெள்ளைக் கொடிகளும் கட்டப்பட்டு இருந்தன.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்ட கச்சேரியில் வெறுமனே சுதந்திரன தின நிகழ்விற்காக சிறிலங்கா தேசிய கொடிமாத்திரமே ஏற்பட்டதாகவும் அந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் அவர்கள் கலந்து கொள்ள

(தொடர்ச்சி 10ம் பக்கம்)


## தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் ஆழிப்பேரலையில் உயிர் நீத்தோருக்கு ஆயிரத்து எட்டு சுடர் ஏற்றி அஞ்சலி

(தனஞ்ஷயன்)

சுனாமி கடல் காவுகையினால் உயிர் நீத்த பொது மக்களின் ஆத்ம சாந்திபெற வேண்டிய நேற்று மாலை 6.30 மணியளவில் ஆயிரத்து எட்டுத் தீபங்கள் ஏற்றும் விசேட ஆராதனை நிகழ்வு கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்,

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



## பாதிப்புறாதவர்களுக்கு வழங்கிய கொடுப்பனவையே மீளப்பெற்றோம்

## பிரதேச செயலர் பாஸ்கரன்

(நமது நிருபர்)

அனர்த்த நிவாரண பாதிப்புக்கள் தொடர்பான விபரம் திரட்டலில் இடம்பெற்ற முறைகேடு காரணமாக வழங்கப்பட்ட சமையல் உபகரணக் கொடுப்பனவு மற்றும் நிவாரண முத்திரை என்பனவற்றை பதினைந்து பேரிடமிருந்து மீளப்பெற்றுக் கொண்டதாக களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் ஆர்.பாஸ்கரன் தெரிவித்தார்.

குருக்கள்மடத்தில் 15பேரது கொடுப்பனவு, அனர்த்த நிவாரண முத்திரைகள் திருப்பி பெற்றமை தொடர்பாக தொடர்பு கொண்ட போதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை மேற்படி 15 பேரது வீட்டுக்குள்ளும் செல்லவில்லை அதனால் அவர்களது வீட்டு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## கைத் துப்பாக்கியுடன் இரு இளைஞர்கள் கைது

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே நேற்று நள்ளிரவு கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 21ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு மட்டக்களப்பு மேலதிக நீதிபதி எம். எச்.எம்.அஜ்மீர் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கிரானைச் சேர்ந்த செல்லத்தம்பி சீலன் மற்றும் கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த உதயராஜ் உருத்திரன் ஆகியோர் மோட்டார்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

### இன்றைய நாளில் தகவலதுளி

**அறிஞர் சித்திலெப்பை நினைவு தினம்**

**(11.06.1838 05.02.1898**

# அம்பாறை மாவட்டத்தில் பத்து பிரதேச செயலாளர் பிரிவில் 38624 குடும்பங்கள் பாதிப்பு

(வி.பி. சிவப்பிரகாசம்)

**அம்பாறை மாவட்டம் டிசம்பர் 26 சுனாமிக்குப் பின்பு இப்போது குறிப்பிடக் கூடியளவு வழமைக்குத் திரும்பிக் கொண்டு வருகின்றது. ஆனால் ஒரு காலத்தில் காடுகளுக்குள் நில அளவையாளர்கள் கூடாரங்கள் அமைத்துக் கொண்டு நில அளவை செய்தது போன்று இப்போது எங்கு பார்த்தாலும் கூடாரங்களில் குடும்பங்கள் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.**

சுனாமித் தாக்கத்தால் இந்த மாவட்டத்தின் பத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 38, 624 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு 75, 492 பேர்கள் 82 நலன்புரி நிலையங்களில் கடந்த ஒரு மாதங்களுக்கு மேல் இருந்து வந்தவர்கள்.

படிப்படியாகச் சொந்த இடங்களுக்கும், சொந்த இடங்களுக்குப் போக முடியாதவர்களுக்கு வசதியான இடங்களில் கூடாரங்கள் அமைத்துக் கொடுத்துள்ளமையினால் நலன்புரி நிலையங்களில் இருந்தவர்களின் தொகையும் குறிப்பிடக் கூடிய அளவு குறைந்துள்ளமையினால் நலன்புரி நிலையங்களாகப் பாவிக்கப்பட்ட பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் பல சுனாமியினால் சேதமடைந்தமையினாலும், சிலர் இன்னும் பாடசாலைகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் இருப்பதாலும் பல பாடசாலைகள் இரு நேரங்களாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

இந்த மாவட்டத்தில் உள்ள பத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சுனாமியினால் 10, 436 பேர்கள் இறந்துள்ளார்கள். இவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வங்கிக் கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. 29, 077 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

இதற்கான மதிப்பீடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான கடன் உதவிகளும், வேதன முற்பணங்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதே நேரத்தில் இந்த மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறும் குடும்பங்களுக்கு விசேடமாக எந்த ஒரு திட்டத்தையும் ஓய்வூதியத் திணைக்களம் மேற்கொள்ள வில்லை என்று ஓய்வூதியச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கதிரேசபிள்ளை கந்தையா தெரிவிக்கின்றார்.

இந்த மாவட்டத்தில் காணாமல் போன 876 பேர்களைப் பற்றிய தகவல்கள் எதுவும் இன்றுவரை இல்லை என்று உறவினர்கள் தெரிவிக்கின்றார்கள்.

காயமடைந்து வைத்தியசாலைகளில் இருக்கும் 120 பேர்களில் ஊனமுற்றவர்களுக்கு நஷ்ட ஈடுகளும் வழங்கப்பட இருக்கின்றது என்று சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட அதிகாரி தெரிவிக்கின்றார்.

வழமையான நிலைமைக்குத் திரும்பிய போதிலும் போக்குவரத்துப் பாதைகள் இன்னும் சீராக இல்லை. மாவட்டத்தில் இன்னும் அரச சார்பற்ற அமைப்புக்களின் நிர்வாகமே செயல் படுகின்றதே தவிர அரச திணைக்களங்களில் எதுவும் நடைபெறுவதாக இல்லாத காரணத்தினால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்வது ஒரு வழமையான நிகழ்வாகவே காணப்படுகின்றது.

## விடுதலைப் புலிகளின் படையினர் யாழ் நகரில் சந்திப்பு

(ஆ.கந்தசாமி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையிலான சந்திப்பு கடந்த (02.02.2005) ஆம் திகதி முற்பகல் 11.00 மணியளவில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் இடம் பெற்றது.

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யாழ். மாவட்டத் தலைமை அதிகாரி தலைமையில் இடம் பெற்ற இச்சந்திப்பில்,

புலிகள் தரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி தலைமையிலான குழுவினரும், இராணுவத் தரப்பில் யாழ். மாவட்ட சிறிலங்கா இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக் கோன் தலைமையிலான குழுவினரும் யாழ். மாவட்டச் சிறிலங்காப் பொலிஸ் அத் தியட்சகர் வணகுரு தலைமையிலான பொலிசாரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பின் போது யாழ். குடாநாட்டில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதில் படையினர் வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் பற்றியும், சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளில் படைத் தரப்பு வழங்க வேண்டிய ஒத்துழைப்புக்கள் பற்றியும் புலிகள் தரப்பால் வலியுறுத்தப்பட்டதுடன்,

பொலிசார், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு முழுமையாகச் செயற்படுவது அவசியம் எனவும் வலியுறுத்தப்பட்டது.

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்கள உதவி கட்டுப்பாட்டாளர் பிணையில் விடுதலை

(நமது நிருபர்)

சிறிலங்கா குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளரான அசோக லால் சந்திர பீரிஸ் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இவர் கடமையாற்றிய சமயம் 31 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களை சட்டவிரோதமாக சம்பாதித்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நீதிபதி சரோஜினி குசேல வீரவர்த்தன முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டபோது,

நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் ரூபா 15 இலட்சம் சரீரப் பிணையிலும், ரூபா 10 ரொக்கப் பிணையிலும் இவரை விடுதலை செய்த நீதிபதி கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய, அவரது மெய்க்காப்பாளர் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 5 பேர் நீதிமன்றத்தில் விசேட வாக்குமூலத்தை அளித்துள்ளார்கள்.

கொழும்பு பிரதம நீதிபதி தமது அறைக்குள் வைத்து இவர்களது இரகசிய வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளார்.

## சுயவிருப்பில் இணைந்து கொண்ட 23 சிறார்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அமைப்பில் சுயவிருப்பில் இணைந்து கொண்ட 18 வயதுக்குக் குறைவான 23 சிறார்களை 03.02.2005 விடுவித்துள்ளனர்.

இவ் 23 சிறார்களையும் விடுவிக்கும் நிகழ்வு மாலை நான்கு மணியளவில் வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தில் இடம் பெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஐ.நா.நிறுவனம், சர்வ தேச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராசாவினால் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வணபிதா கருணாரட்ண அவர்களிடம் 23 சிறார்களையும் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காகக் கையளிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்தில் இயங்குகின்ற குழுவினரால் இனம் காணப்பட்ட அகவை குறைந்த சிறுவர்களே நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.



திருக்கோவில் பிரதேசத்தில் சுனாமித் தாக்கத்தினால் முழுமையாக அழிந்த தம்பட்டைக் கிராமத்தில் உள்ள 215 குடும்பங்களைத் தற்காலிகமாக அதே கிராமத்தின் ஒரு பகுதியில் மீள் குடியேற்றம் செய்வதற்கான தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துக் கொடுக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபடுவதைப் படத்தில் காண்க. (படப்பிடிப்பு:- வி.பி. சிவப்பிரகாசம்)

## உபவேந்தராக நியமனம்

(சி.பி.ஹரிச்சந்திரன்)

கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தராக எஸ்.ரவீந்திரநாத் ஜனாதிபதியினால் நியமனம் பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் பதில் உபவேந்தராகக் கடமையாற்றிய இவர் கடந்த ஜனவரி 27 ஆம் திகதி முதல் உபவேந்தராக மூன்று வருடங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1981 ஆம் ஆண்டு தொடக்கம் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றிவரும் இவர் கடந்த மூன்று வருடங்களாகப் பதில் உபவேந்தராகக் கடமையாற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## செய்தித் துளிகள்

### நிவாரணப் பணிகள்

(எஸ்.சசி)

சுனாமி ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் களுவாஞ்சிகுடி இந்து சேவா இலங்கா மன்றத்தினர் நிவாரணப் பணிகளை இராசமாணிக்கம் கலாசார மண்டபத்தினை பணியகமாக அமைத்து டிசம்பர் 26 ஆம் திகதி முதலாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

களுவாஞ்சிகுடி இராசமாணிக்கம் கலாசார மண்டபம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்கருகில் அமைந்துள்ளது.

இந்து சேவா இலங்கா மன்றத்தினரால் நிறுவப்பட்டிருக்கும் நிவாரணப் பணியகத்தினை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் எனப் பிரதேச செயலாளரும், ஆலய பரிபாலன சபையினரும் இணைந்து வேண்டு கோள் விடுத்துள்ளனர். அதை அடுத்து இந்து சேவா இலங்கா மன்றத்தினர் நிவாரணப் பணியகத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்குத் திட்டமிட்டு இருப்பதாக இந்து சேவா இலங்கா மன்ற மாவட்ட இணைப்பாளர் எஸ்.சுதர்சன் தெரிவித்துள்ளார்.

### சம்பள முற்பணம் பெறுவதில் ஆர்வம்

(டிலு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சுனாமியினால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் 12 மாதச் சம்பளம் பெறுவதில் வெகு ஆர்வம் காட்டி வருவதுடன், பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் சான்றிதழ்கள் எடுப்பதிலும், கிராம சேவகர் சான்றிதழ் பெறுவதிலும் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந் நடவடிக்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களை விட பாதிக்கப்படாதவர்கள் தேவையான சான்றிதழ்களைப் பெற்றுள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. இந் நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நன்மை கிடைக்க வழி செய்து தரும்படி பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

### இடிந்து விழும் அபாயம்

(டிலு)

செங்கலடி, பதுளை, வீதியில் கறுத்தப் பாலத்தை அடுத்தடுத்து வரும் இருபாலங்கள் இடிந்து விழுந்து உள்ளதுடன், அன்றாடம் மிக அதிகமான வாகனங்கள் இவ்வீதியினால் பிரயாணத்தில் ஈடுபடுவதுடன், பாரமான நெல், கல், கிறவல் போன்றவற்றை வாகனங்களில் ஏற்றிவரும் போது இடிந்து விழும் நிலை காணப்படுகின்றது. இதனால் வாகனங்களில் செல்வோர் இறைவனை வணங்கிச் செல்வதையும் எப்போது, இடிந்து கீழே விழும் என ஏங்குவதையும் காணக் கூடியதாக உள்ளது.

### பாடசாலை செல்லுமாறு வேண்டுகோள்

(டிலு)

சுனாமி கடற் கொந்தளிப்பு அனர்த்தங்களைத் தொடர்ந்து பாடசாலை செல்லாதுள்ள அனைத்து மாணவர்களையும் மீண்டும் பாடசாலைக்குச் சென்று தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடருமாறு யுனிசெப் நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது வரை பாடசாலை செல்லாதுள்ள மாணவர்கள் மீண்டும் பாடசாலை சென்று தமது கல்வியைத் தொடருவதற்குப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் உதவ வேண்டும் என்றும் யுனிசெப் நிறுவனம் கேட்டுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்த அனர்த்தங்கள் காரணமாக எற்கனவே பாதிக்கப்பட்டிருந்த கல்வி நடவடிக்கைகள் தற்போதைய இயற்கை அனர்த்தங்களைத் தொடர்ந்து மேலும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா அரசானது தமிழர் புனர்வாழ்வு கழகத்திடமிருந்து பாடம் படிக்க வேண்டும்.

## பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்



(தனஞ்ஷயன்)

இன்றைய சிறிலங்கா அரசானது தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திடமிருந்து பாடம் படிக்க வேண்டும் அதே நேரம் சிறிலங்கா அரசினால் கூட செய்து முடிக்க முடியாத இப்பாரிய வேலைத்திட்டத்தினை தமிழர்புனர் வாழ்வுக்கழகம் செய்து முடித்தமை சிறப்பிற்குரியதாகும். என நேற்று முன்தினம் பிற்பகல் சத்துருக் கொண்டானில் அமையப்பெற்ற சுவிஸ் கிராம இடைத்தங்கல் முகாமில் கலந்துகொண்டு பேசுகையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்று இலங்கை உள்ளிட்ட 19 நாடுகளில் தமது கிளையினை கொண்டுள்ள் தமிழர் புனர்வாழ்வுக்கழகமானது 1985ம் ஆண்டு சென்னையில் வைத்தே எமது தமிழீழத் தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் 50,000 ரூபா ஆரம்ப நிதியுடனேயே இவ்வமைப்பு ஆரம்பமானதாகும்.

ஆனால் இன்று உலகளாவிய மட்டத்தில் இவ்வமைப்பு வியாபித்திருப்பதற்கு தலைவரின் அன்றைய சிந்தனையின் வடிவமே களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. வட கிழக்கில் சிறிலங்கா அரசினால் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடமைப்புத் திட்டத்தில் அவ் வீடமைப்பானது 500 சதுர அடிக்கு குறையாமல் வீடு அமைய வேண்டும். அவ்வாறு ஒரு அடி அளவு கூட இருந்தால் அவ் வீடமைப்புத்திட்டத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிராகரிக்கும்.

இன்று சிறிலங்கா அரசுடன் இணைந்து சில நிறுவனங்கள் வட கிழக்கிற்குக் கோழிக் கூடுகளை அமைக்க முன்வந்துள்ளது.எமது வடக்குக் கிழக்குப் பிரதேச மக்கள் வசதியோடும், வாய்ப்போடும் வாழ்ந்தவர்கள் எனவே அவர்களுக்கு ஏற்ற வீடுகளை அமைத்துக் கொடுக்க அரசு முன்வரவேண்டும் என்றார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்கள் விபரம் திரட்டல்

(நமது நிருபர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர் கழக உறுப்பினர்களின் விபரங்கள் திரட்டும் பணி மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள இளைஞர் கழக உறுப்பினர்களின் விபரங்களை இளைஞர் கழகத் தலைவர், செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் பிரதேச இளைஞர் சம்மேளனத் தலைவர் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் தே. இ. சே. ம அலுவலர்கள் அரசயடி மட்டக்களப்பு என்ற முகவரியுடனோ, விடுமுறை தவிர்ந்த நாட்களில் பார் வீதிச் சந்தியிலுள்ள இணைய காரியாலயத்திற்கோ சமூகம் கொடுத்தோ (அல்லது 065-2226414, 077 6529939, fax 065 2247168 email pprashanthan 200 yahoo.co.uk என்ற முகவரியுடனோ) தங்களது விபரங்களை தெரிவிக்கும் மாறும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தேவைப்படும் அத்தியாவசிய தேவைகள் பற்றி அங்கு விஜயம் செய்யும் தலைவர் பூ. பிரசாந்தன் தலைமையிலான அனர்த்த முகாமைத்துவ விசேட இளைஞர் படை அணியுடன் தொடர்பு கொள்ளும் படியும் இணைப்பாளரும், திட்டப் பொறுப்பாளருமான உ. யுவநாதன் தெரிவிக்கின்றார்

### சிவதொண்டர் அமைப்பு மூச்சுப்பயிற்சி

(தம்பிலுவில் நிருபர்)

தம்பிலுவில் சிவதொண்டர் அமைப்பும் வாழுக்கலைப் பயிற்சி நிறுவனமும் இணைந்து நடாத்திய மூச்சுப் பயிற்சி சென்ற 2ம் திகதி தம்பிலுவில் நடைபெற்றது. மாணவர்களின் உள நலத்தைப் பேணும் வகையில் தம்பிலுவில் கலைமகள் வித்தியாலயம், மகாவித்தியாலயம்,அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையிலும் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் சிங்கப்பூரில் இருந்து வருகை தந்திருக்கும் பயிற்றுவிப்பாளர்களினால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## சம்மாந்துறை பிரார்த்தனை - வைபவத்திற்கு காரைதீவில் இருந்து வாழ்த்து மடல்

(விரி. சகாதேவராஜா)

சுனாமியில் சிக்கி பலியானவர்களுக்காக இன்று சனிக்கிழமை சம்மாந்துறையில் நடை பெறும் பிரதான பாரிய பிரார்த்தனை வைபவத்திற்கு கரையோரப் பிரதேசங்கள் வாழ்த்துக்கூறு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர்.

சுனாமி அனர்த்தம் சம்பவித்த பின்னர் சம்மாந்துறை மக்கள் காட்டிய இனபேதமற்ற உபசரிப்பு பராமரிப்பு என்பவற்றுக்கு நன்றிகூறும் மடல்களை கரையோரப்பிரதேச கிராமங்கள் அனுப்பிக்கொண்டிருக்கின்றன.

பள்ளிவாசல்களைத் திறந்து மக்களுக்கு அபயமளித்து உணவு வழங்கி பல நாட்கள் பராமரித்தமைக்காகவும், அன்பு செலுத்தியமைக்காகவும் காரைதீவு தமிழ் கிராமத்திலிருந்து பல நன்றிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பிரதியமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவரது செயலாளர் வைபி. சலீம் உள்ளிட்ட குழுவினர் இரவு பகல் பாராது செய்த அர்ப் பணிப்புள்ள சேவையை இன்றைய 40ம் நாளில் நினைத்துப் பார்த்து நன்றி கூறுகின்றோம் என்று சாய்ந்த மருதிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு கடிதம் கூறுகின்றது.

மேலும் இன்று மலையடிக் கிராம மையவாடியில் நடைபெறும் பிரார்த்தனை வைபவத் தையும் சிறப்புற வாழ்த்துகின்றனர்.

## ஆழிப்பேரலையால் மட்டு மாவட்டத்தில் 2840 பேர் இதுவரை பலி

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி கடற்கோளினால் மட்டு கச்சேரி சுனாமி அனர்த்த தகவல் பிரிவினால் 1ம் திகதி வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையின் படி 14 பிரதேச செயலாளர்களின் பிரிவுகளில் இருந்து 63, 717 குடும்பங்களிலுள்ள 254,868 பேர் சுனாமியால் பாதிப்பிற்குள்ளாகி உள்ளனர்.

மொத்தமாக 2,840 பேர் உயிரிழந்துள்ளதுடன், 952 பேர் காணாமல் போயுள்ளனர். பிரதேச ரீதியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை பார்த்தால் மண்முனை வடக்கில் 13,350 குடும்பங்கள் காத்தான்குடியில் 6,683 குடும்பங்கள், பட்டிப்பளையில் 1000 குடும்பங்கள், வெல்லாவெளியில் 1,270 குடும்பங்கள், ஆரையம்பதியில் 5,820 குடும்பங்கள், வாகரை 5,027 குடும்பங்கள் ஓட்டமாவடி 215 குடும்பங்கள், ஏறாவூர் நகர் 175 குடும்பங்கள், வவுணதீவு 827 குடும்பங்கள் ஆகும்.

இந்தக் குடும்பங்களை தனியாகப் பார்க்குமிடத்து மட்டு மாவட்டத்தில் 254,868 பேர் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

அகதிமுகாம்களிலும் கூடாரங்களிலும் 26,827 பேர் இருக்கின்றனர். உறவினர் வீடுகளில் 35,409 பேர் தங்கியுள்ளனர்.

மொத்தமாக இம் மாவட்டத்தில் முழுமையாக 15,477 வீடுகள் சேதமடைந்துள்ளது. பகுதிச் சேதமாக 5,546 வீடுகள் சேதத்துக்குள்ளாகியுள்ளது. தற்போது மொத்தமாக இம் மாவட்டத்தில் 47 அகதி நலன்புரி நிலையங்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இருமாதம் கழிந்தும் அடையாள அட்டையில்லை நடமாடும் சேவையில் கையளித்தோர் கவலை

(நமது நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் நடந்த இரு மாதங்களுக்கு முன் கடந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் கையளித்திருந்த போதும் இதுவரை அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை என விண்ணப்பதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த 12.10.2004ம் திகதி களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் மண்முனை தென்மேற்குப் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் மக்கள் புதிய தேசிய அடையாள அட்டைபெறும் விண்ணப்பங்கள் 82ம் தொலைந்த தேசிய அடையாள அட்டைக்குப் பிரதி அட்டை பெறும் விண்ணப்பம் 17ம் பழுதடைந்த தேசிய அடையாள அட்டைக்குப் பிரதி அடையாள அட்டைபெறும் விண்ணப்பம் 15ம் ஆக மொத்தம் 114 விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பங்களை இப் பகுதி கிராம உத்தியோகத்தர் மேற்பார்வையின் கீழ் கையளித்திருந்தனர். இரு வாரகாலத்திற்குள் குறித்த விண்ணப்பப் படிவங்களுக்கான அடையாள அட்டைகளை விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என நடமாடும் சேவையினை நடத்திய பொறுப்பு வாய்ந்த பணிப்பாளர் தெரிவித்திருந்தார். இந்நடமாடும் சேவையின் பிற்பட்ட காலத்தில் அனுப்பிவைக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் காரியாலயத்தை வந்தடைந்த போதிலும் மக்களின் காலடியில் சேவையினை வழங்கும் நோக்கோடு நடத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் 2ம் மாதமும் 20 நாட்கள் கடந்துள்ள போதிலும் இற்றைவரை கிடைக்கவில்லையென இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## பாதிப்புற்ற பகுதிகளுக்கு மீண்டும் மின்வசதி

(காத்தான்குடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்டுள்ள அதிகமான பிரதேசங்களுக்கு முடியுமானவரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட மின்சார சபையின் பிரதமபொறியியலாளர் கே. எம். பரஞ்சோதி தெரிவித்தார்.சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பல பிரதேசங்கள் இருளில் மூழ்கின இருந்த போதும். இப்பிரதேசங்களில் மின்சாரத்துக்கு இடையூறாக இருந்த பல கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியிலும் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாணம் எங்கும் பூரண துக்கதினம் அனுஷ்டிப்பு

(மருதமுனை டி.எம்.எம்.ஏ.காதர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்த கிழக்குமாகாண முஸ்லிம்,தமிழ், சிங்கள மக்களின் 40ம், 41ம், நினைவு தினத்தை முன்னிட்டு வியாழக்கிழமை அன்று கிழக்குமாகாணமெங்கும் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் பூட்டப்பட்டு வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பள்ளி வாசலெங்கும் மற்றும் வணக்கஸ்தலங்களிலும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

பெரியநீலாவணை, மருதமுனை, கல்முனை, ஸ்லாமபாத், கல்முனைக்குடி, சாய்ந்தமருது, நிந்தவூர் பிரதேசங்களிலுள்ள பள்ளிவாசல்களிலும் பொதுஸ்தாபனங்களிலும் து, ஆப் பிரார்த்தனை கத்தமுல் குர்ஆன் , அன்னதானம் என்பனவும் வழங்கப்பட்டன.

துக்கம் அனுஷ்டிப்பால் அரசாங்க அலுவல்கள் பெரிதாக நடைபெறவில்லை. இருந்தபோதிலும் கல்முனை மக்கள் வங்கிக்கிளை அலுவல்கள் காலையில் நடைபெற்றதை அவதானிக்க முடிந்தது.

போக்குவரத்துக்கள் ஓரளவு நடைபெற்றது. நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி பஸ்களும் தனியார்வாகனங்களும் சேவையில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

## சுதுமலையில் வகுப்பறை கூரை முறிந்து வீழ்ந்து 15 மாணவர்கள் படுகாயம்

(ஆ.கந்தசாமி)

யாழ் சுதுமலை சிற்மய பாரதி வித்தியால்யத்தின் ஆரம்ப பாடசாலைக் கட்டிடத் தொகுதியில் உள்ள வகுப்பறையொன்றின் கூரைப்பகுதி உடைந்து வீழ்ந்ததில் 15 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த 15 பேரில் 10 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது சம்பவ நேரம் மேற்படி வகுப்பறையினுள் தரம் 3,4 வகுப்பு மாணவர்களுக்கு வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த போது இவ்வகுப்பறையின் கூரை வளையுடன். முறிந்து அங்கு கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் மீது விழுந்ததிலேயே இவ்வனர்த்தம் நேர்ந்துள்ளது.

இதேவேளை மேற்படி வகுப்பறை அமைந்துள்ள கட்டிடத் தொகுதி நூற்றாண்டுகால பழமை வாய்ந்தது என்பதனால் அறையின் சுவர்களில் ஏற்பட்டுள்ள உடைவுகள் காரணமாகவே முறிந்து வீழ்ந்தது எனவும் இப்பாடசாலை கட்டடத்தின் நிலைமைகள் குறித்து ஏற்கனவே உயர் அதிகாரிகளிடம் முறையிட்டும் அதனைப் புனரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என ஆசிரியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## நிவாரணக் கொடுப்பனவு வழங்காததால் முகாம் பொறுப்பதிகாரியின் சைக்கிள் ஈடு

(விரி. சகாதேவராஜா)

சுனாமியால் பாதிக்கப்பட்டு அகதிமுகாமிலிருக்கும் ஒருவர் தனக்கு ரூ. 2500 ரூபா கொடுப்பனவு தரப்படாத காரணத்தினால் முகாமிற்குப் பொறுப்பான கிராம அலுவலரின் சைக்கிளைக் கொண்டு சென்று ஈடுவைத்துப் பணம் பெற்றுள்ளார்.

இச்சம்பவம் காரைதீவுப் பிரதேசத்திலுள்ள மணிமண்டப முகாமில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:- பிரஸ்தாப நபர் உயிரிழந்து உடமையிழந்து அகதிமுகாமில் வாழ்ந்து வருகின்றார்.அரசு வழங்கும் ரூ 2.500 பணம் தனக்கு வழங்கப்படாததற்கு கிராமசேவகர் தான் காரணமெனக் கருதினாரோ என்னவோ அவரின் சைக்கிளைக் கொண்டுசென்று ஈடு வைத்து ரூ 500 பெற்றுக்கொண்டாராம். விடயம் தெரியாது சைக்கிளைத் தேடியுள்ளார். கிராமசேவகர். பின்னர் இது விடயம் வெளியே வர சம்பந்தப்பட்டவர் 3 நாட்களின் பின்பு ஈட்டுக்காசை கட்டிவிட்டு சைக்கிளை கொண்டு மீள ஒப்படைத்தாராம். கிராமசேவகர் அரசின் பிரதி நிதி அவர் தனக்கு அந்த ரூ 2500 கொடுப்பனவைப் பெற்றுத் தந்திருக்கவேண்டும் என்பது அவரது எதிர்பார்ப்பாம்.

## ஆசிய அபிவிருத்தி வங்கிமூலம் ஐம்பது தண்ணீர் பவுசர்கள்

(காத்தான்குடி நிருபர்)

வட கிழக்கு மாகாணத்தில் சுனாமி கடற்கோளினால் பாதிப்புக்குள்ளான பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வட கிழக்கு மாகாண சபைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஐம்பது தண்ணீர் பவுசர்களையும் ஐம்பது நீர் இறைக்கும் இயந்திரங்களையும் வழங்கியுள்ளது. சுமார் 5 கோடிரூபா பெறுமதியான இந்த பவுசர்களும் சுனாமி கடற்கோளினால் பாதிப்படைந்து குடிநீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்ற யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஏடோ சினோவினால் வட கிழக்கு மாகாண சபைக்கு இவ்வியந்திரங்கள் சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட பிளவுகளாலே இன்று முஸ்லிம் சமுதாயம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது

## விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.ஜமால்தீன்

(மருதமுனை நிருபர்)

இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட முஸ்லிம்களுக்கிடையிலான போர்களும், அவர்களுக்கிடையிலான நிலத்தைத் தேடுகின்ற பண்புகளும், பொன்பொருளைத் தேடுகின்ற ஆசைகளும் மிதமிஞ்சி விட்டது.

இதன்காரணமாகவே அன்றைய கல்வியில் உலகம் மிகவும் பாதிக்கப்பட்டது. அதன் காரணமாகத்தான் முஸ்லிம் சமுதாயம் வரலாற்று ரீதியாக தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு சுனாமியால் பாதிக்கப்பட்ட மருதமுனைப் பிரதேசத்து பல்கலைக்கழக மற்றும் கல்லூரி, பாடசாலை மாணவர்கள் ஆகியோருக்கு புத்தகங்கள், உடுதுணி என்பன மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபை ஏற்பாட்டில் அண்மையில் (2005.01.26) மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் வழங்கிய வைபவத்தில் தலைமையுரையாற்றிய மருதமுனை ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான மௌலவி எம்.எஸ்.எம்.ஜமால்தீன் தெரிவித்தார்.

100க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் மௌலவி ஜலால்தீன் தொடர்ந்து உரையாற்றுகையில்:- அறிவைத் தேடுகிறவர்களாகவும், கல்விக்கு உதவுகின்றவர்களாகவும் மாணவர் சமூகம் இருக்க வேண்டும்.

இஸ்லாமிய சமுதாயம் எந்தக் காலத்தில் கல்வியோடு தொடர்புடையதாக இருந்ததோ அந்தக் காலத்தில் தான் இஸ்லாமிய சமுதாயம் மிகவும் விழிப்புணர்ச்சி பெற்றது. இஸ்லாமிய சமுதாயத்தின் கல்வியின் தாக்கங்கள் ஐரோப்பாவை ஆட்கொண்டிருந்தது. ஐரோப்பாவிலிருக்கின்ற கலைகள், தத்துவங்கள், விஞ்ஞானங்களுக்கெல்லாம் ஒரு முக்கிய மூல கர்த்தாக்களாக கல்வியோடு தொடர்புடைய இஸ்லாமியர்கள் இருந்தார்கள்.

இந்தச் சுனாமி அனர்த்தம் பல விஷயங்களை எங்களுக்குச் சொல்லியிருக்கிறது. இவ்வுலக வாழ்க்கையென்பது இன்றோ, நாளையோ முடியப் போகிறது. நாங்கள் எந்த நிமிடமும் மௌத்துக்குத் தயாராக இருக்க வேண்டுமென்பதை இந்த சுனாமி அனர்த்தம் எங்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார். இந்நிகழ்வில் 100க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கடந்த கால வினாவிடைப் புத்தகங்கள் உடைகள் உட்பட பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களும் வழங்கப்பட்டது.

# கண்டி மனித அபிவிருத்தி தாபனம் காரைதீவில்

(விரி.சகாதேவராஜா)

கண்டி மனித அபிவிருத்தித் தாபனம் (HDO) சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல சேவைகளைச் செய்து வருகின்றது. ஆரம்பத்தில் உலருணவுகளை வழங்கிய மேற்படி தாபனம் தற்போது மக்களுடன் இருந்து பாலர் பாடசாலைகளை ஆரம்பித்து உதவிகளை வழங்கி இயக்கி வருகின்றது.

இதைவிட இ.கி.மிஷன் காரைதீவு ஆண்கள் பாடசாலையிலுள்ள அகதிகளை மீள்குடியேற்ற நந்தவனப் பிள்ளையார் ஆலய மருங்கிலுள்ள காணியில் 30 வீடுகளை நிர்மாணித்து வருகின்றது.அந்த வீட்டுத் தொகுதியில் முன்பள்ளிப் பாடசாலை, மலசலகூடத் தொகுதி, கிணறு, மைதானம் என்பனவும் அமைக்கப்படவுள்ளதென மாவட்ட இணைப்பாளர் கே.ஸ்ரீகாந் கூறினார்.

இதுவரை காரைதீவில் 06 பாலர் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக அதற்கான இணைப்பாளர் பிரேம்லன் கூறினார். பிரான்ஸ் வைத்தியர்களைக் கொண்டு நடமாடும்வைத்திய சேவையை பல முகாம்களிலும் நடாத்தியதாகவும் அவர் கூறினார்.

# சம்மாந்துறை மையவாடியில் இன்று பிரார்த்தனை நிகழ்வு

(மருதமுனை நிருபர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிரிழந்து சம்மாந்துறையில் நல்லடக்கம் செய்யப்பட்ட 3612 பேரின் 40ம் நாள் நினைவை முன்னிட்டு பிரார்த்தனை நிகழ்ச்சியொன்று இன்று காலை (2005.02.05) 10.00 மணிக்கு சம்மாந்துறை மஸ்ஜிதுல் முஅல்லாவின் மையவாடியில் நடைபெறவுள்ளது. கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் அவர்களின் வழிகாட்டலில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த சகோதரர்களின் ஈடேற்றத்திற்காக கத்தமுல்குர் ஆன், துவாப் பிரார்த்தனை என்பன நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உயிரிழந்தோர்களின் உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சுனாமி இறப்புக்களை மூன்று மாதத்திற்குள் பதிய வேண்டும் காணாமல் போனோருக்கு விசேட சட்டம் வருகிறது

## வட கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் தகவல்

(விரி.சகாதேவராஜா)

"சுனாமி இறப்புக்களை மூன்றுமாத காலத்தினுள் பதிய வேண்டும். தாமதித்தால் காலங் கடந்த பதிவு என்று நீண்ட சிக்கலான நடை முறைக்குள் சிக்க வேண்டி நேரிடும். எனவே முடியுமானவரை மக்கள் இறப்புக்களை விரைவாகப் பதிய வேண்டும்".

இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவம் ஐயர் தெரிவித்தார். சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களின் பிரதேச செயலகங்களுக்குச் சென்று இறப்புப் பதிவு பற்றி நேரடியாக விளக்கமளித்து வரும் அவரை காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து எமது நிருபர் சந்தித்து பலவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டார். அவற்றை மக்களின் நன்மை கருதி இங்கு தருகிறோம்.

காணாமல் போனோர் தொடர்பாக விரைவில் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு சுனாமிக்கென விசேட ஏற்பாடு வெளிவரவிருக்கிறது. அனேகமாகக் காணாமல் போனோர் இறந்தவர் எனக்கருதி மரண சாட்சிப் பத்திரம் வழங்கப்படலாமென கருதப்படுகின்றது. முன்பு ஒருவர் காணாமல் போனால் 7 வருடங்களின் பின்பு நீதிமன்றம் மூலமாக விண்ணப்பித்த பின்தான் இப்பத்திரம் வழங்கப்படுவது வழமையாகும்.

சுனாமிக்கென விசேட ஏற்பாடு செய்யப்படவேண்டுமென எமது பதிவாளர் நாயகம் நிதித் துறை அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன்படி அமைச்சரவை மூலம் இது நிறைவேற்றப்பட்டு நடை முறைக்கு வரும். விரைவில் அதனை எதிர்பார்க்கலாம்.

### இறப்புக்கு முதலிடம்

தற்போது சுனாமியால் இறந்தவர்களுக்கான மரணச் சான்றுப் பத்திரம் வழங்குவதிலேயே கூடிய கவனம் எடுத்து வருகிறோம். முன்பிருந்த சுற்று நிருபப்படி திடீர் மரண விசாரணை அதிகாரி அறிக்கை மூலம் அல்லது கிராம சேவகர் 30ஆம் பிரிவின் கீழ் BLL படிவத்தில் உறுதிப்படுத்தினால் அதன் மூலம் மரணப்பத்திரம் வழங்கலாமென்றிருந்தது.

ஆனால் தற்போது கிராம சேவகர் மூலம் பெறப்படும் முறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. மாறாக சகல மரணங்களும் திடீர் மரண விசாரணை அதிகாரியின் B18 அறிக்கை மூலம் பதியப்பட்டு அறிவிப்பின் பின் பத்திரம் வழங்கப்படும்.

இந்த இரு சுற்றுநிருபங்களுக்குட்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட மரணச் சான்றுப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட மாட்டாது.

எனினும் தற்போது மரண விசாரணைகளை மிகவும் துரிதமாக செயற்படுத்த இலகுவாக்கியுள்ளது. எனவே இறப்புக்கான பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம் என்றார்.

# சாய்ந்தமருதில் 18 முகாம்கள் 10500 பேருக்கு ரூபா 375 முத்திரை

## மீதி விரைவில் வழங்கப்படுமென்கிறார் டி.எஸ்.மன்சூர்

(விரி.சகாதேவராஜா)

சாய்ந்தமருதில் சுனாமி யால் பாதிக்கப்பட்டு அகதி முகாம்களிலுள்ள மக்களைக் குடியேற்ற 18 இடைத்தங்கல் முகாம்கள் நிருமாணிக்கப்பட்டு வருகின்றன.

அவற்றில் 5 முகாம்கள் பூர்த்தியடையுமென சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் தெரிவித்தார். வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் "கோல்" (GO AL) என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமும் இந்த இடைத்தங்கல் முகாம்களை அமைத்து வருகின்றன.

இந்த 18 முகாம்களிலும் தற்போதுள்ள அகதிகளைக் குடியேற்றினால் பெரிய பிரச்சினையொன்று தீருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. அகதி முகாமாக இயங்கிவரும் 4 பாடசாலைகளுள் இன்று சாய்ந்தமருது அல்.ஹிலால் வித்தியாலயம் மற்றும் ஜி.எம்.எம் எஸ் என்பன விடுவிக்கப்படும் திங்கள் முதல் பூரணமாக இப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்படலாம்.

அல்கமறூன் பாடசாலை தொடர்ந்து சிலகாலம் அகதி முகாமாக இயங்குமானால் சாஹிரா, பாளிகா பாடசாலைகள் பூரணமாக இயங்கவைக்க முடியுமெனவும் கூறினார்.

இதனைவிட சாய்ந்தமருதுப் பகுதியில் 10500 பேருக்கு ரூபா 375 முத்திரை வழங்கப்பட்டு வருகிறது. மீதி 15000 பேருக்கும் விரைவில் வழங்கப்படுமென்று பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் மேலும் தெரிவித்தார். உலக உணவுத் திட்ட நிவாரணம் போனாலும் இரு வாரங்களுக்காக இன்று வழங்கப்படுமென்றும் கூறினார்.

# புதிய தலைவராக றஊப் ஹாஜியார்

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் புதிய தலைவராக மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் மகீத் ஏ.றஊப் ஹாஜியார் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

காத்தான்குடியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஜனாதிபதியின் சிபாரிசின் பேரில் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணியின் அரசாங்கத்தில் வி.இராமநாதன் தலைவராக கடமையாற்றினார். புதிய அரசாங்கம் பதவியேற்றத்தைத் தொடர்ந்து தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதனைத் தொடர்ந்து இப்பதவி கடந்த ஒரு வருடமாக வெற்றிடமாக இருந்ததுடன் நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி தலைவர் இல்லாமலே தனது பணிகளை மேற்கொண்ட நிலையிலேயே இப்பதவிக்கு புதிய தலைவராக மகீத் ஏ.றஊப் நியமிக்கப்பட்டுள்ளார்.

# காரைதீவு வைத்தியசாலை எங்கு அமையப் போகிறது

(விரி.சகாதேவராஜா)

காரைதீவு சுற்றயல்கூறு வைத்தியசாலை சுனாமியால் முற்றாகப் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக காரைதீவு கமநல கேந்திர நிலையத்தில் இயங்கி வருகிறது. பல வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வரும் இவ்வைத்தியசாலை நிரந்தர மாக எங்கு அமையப் போகிறது? என்பதில் சந்தேகம் நிலவுகிறது.

விஷேட அதிரடிப்படை முகாமருகிலுள்ள பழைய கணேசன் மில் அருகே அமையுமென முன்னர் கூறப்பட்டிருந்த போதிலும் பின்னர் அதிரடிப்படைத் தலைமையகம் அதற் குத் தயக்கம் காட்டியதாக கடந்த சுனாமி இணைப்புக் குழு கூட்டத் தில் கூறப்பட்டது. சுனாமி இணைப் புக் குழுக் கூட்டம் கடந்த இருவாரங்களுக்கு மேல் கூடாமலிருப்பதும் இத்தகைய சந்தேகங்களுக்கு வித்திடுகிறது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனம் உதவி

(வி.பி.சிவப்பிரகாசம்)

அக்கரைப்பற்று கல்வி வலயமான பொத்துவில், திருக்கோயில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய கல்விக் கோட்டங்களில் 97 பாடசாலைகள் செயற்பட்டு வருகின்றது. இவற்றில் 36846 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். 1384 ஆசிரியர்கள் சேவையில் இருக்கிறார்கள். சுனாமிப் பேரலையின் போது கரையோரப் பிரதேசத்திலுள்ள 10 பாடசாலைக் கட்டிடங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளது. 13 பாடசாலைக் கட்டிடங்கள் குறிப்பிடக் கூடியளவு சேதங்கள் ஏற்பட்ட போதிலும் திருத்தங்கள் செய்ய முடியும் எனத்தெரிவிக்கப்படுகின்றது. 24 பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக பாவிக்கப்பட்டமையினால் அங்குள்ள தளபாடங்களுக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கிறது.

இங்கு அகதிகளாக 40781 பேர் இருந்து வந்தார்கள் என்றும் தற்போது குறிப்பிடத்தக்க அளவு அகதிகள் தங்கள் சொந்த இடங்களுக்கும், அவர்களுக்காக அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரங்களுக்கும், வேறு இடங்களுக்கும் சென்றுள்ளார்கள். இதனால் பாடசாலைகள் நடைபெற்று வருகின்றது. சுனாமிப் பேரலையின் போது 152 மாணவர்களும், இரு ஆசிரியர்களும் பலியாகியுள்ளார்கள். அக்கரைப்பற்று வலயத்தின் கல்வி நிலைமை வழமைக்கு கொண்டு வருவதற்கு யுனிசெப் பெருமளவு நிதியுதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. முற்றாகச் சேதமடைந்த பத்துப் பாடசாலைகளுக்கு பக்கத்தில் தற்காலிக கட்டிடங்கள் அமைத்து பாடசாலைகள் நடத்தப்படுகிறது. சுனாமியால் இழந்த இந்த வலயத்திலுள்ள கல்வி வசதிகளை மீண்டும் சகஜ நிலைக்கு கொண்டு வருவதற்கு 118 மில்லியன் ரூபா தேவையாக இருக்கிறது என்று மதிப்பீடுகள் செய்யப்பட்டிருக்கிறது. யுனிசெப் அமைப்பு முதல் கட்டமாக 25 இலட்சம் ரூபா பெறு மதியானகற்கை உபகரணங்களும், மாணவர்களுக்கான சீருடைகள், பாடசாலைத் தளபாடங்கள் போன்றவைகளை யுனிசெப் அமைப்பின் அம்பாறை மாவட்டத் திட்டமிடல் அதிகாரி கலாநிதி கிறி ஸ்டினாடீ புறுவின் கடந்ததினம் வலயக் கல்விப் பணிப்பாளர் யு.எல்.எம். ஹஸீ மிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டதை தொடர்ந்து பாடசாலைகளுக்கு கோட்டக்கல்வி அதிகாரிகளினால் வழங்கப்பட்டு வருகிறது. இது மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்வதற்கு ஊக்குவிப்பாகவும், பாடசாலைகளுக்கு தேவையான தளபாடங்களில் ஒரு பகுதியை பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அமைந்திருக்கிறது. இதே நேரத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் என இனம் காணப் பட்டு அவர்களுக்கு 350. ரூபா பெறுமதியான நிவாரணப் பொதிகள் அல்லது ரொக்கப்பணமும் யுனிசெப்பினால் வழங்கப்படவிருக்கிறதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



திருக்கோவில் பிரதேசத்தில் முழுமையாக அழிந்து போன தம்பட்டை கிராம மக்களை அந்தக் கிராமத்தின் மேட்டுப் பிரதேசங்களில் 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' தற்காலிமான கூடாரங்களை அமைத்து அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும் கூடார வீடுகளின் ஒரு பகுதியைப் படத்தில் காண்க. (படம்:-வி.பி.சிவப்பிரகாசம்)

# ஆர்க்கிமிடீஸ் (கி.மு 287-212)



குளத்தில் சிறு கல் ஒன்று போட்டால் அது தண்ணீருக்குள் மூழ்கி விடுகிறது. ஆனால் மிகப் பெரிய கப்பல் தண்ணீரில் மிதப்பதை நாம் பார்க்கின்றோம். இதற்குக் காரணம் என்ன? இந்த உண்மையை முதன் முதலில் கண்டறிந்தவர் ஆர்க்கிமிடீஸ் என்னும் விஞ்ஞானி.

ஆர்க்கிமிடீஸ் சுமார் 200ம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு கணித மேதை. இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்த சிசிலித் தீவில் சைரக்யூஸ் என்னும் இடத்தில் கி.மு 287ல் பிறந்தார். சைரக் யூசை ஆண்டு வந்த அரசனுக்கு இவர் மிகவும் உதவியாக இருந்து வந்தார்.

ஒரு நாள் ஹியரோ என்ற அரசன் தங்கத்தால் கிரீடம் ஒன்றை ஆர்க்கிமிடீஸிடம் கொடுத்து அது சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டது தானா? அல்லது வேறு உலோகம் அதில் கலந்திருக்கிறதா என்று கண்டு பிடிக்கும் படி கேட்டுக் கொண்டான். கிரீடத்திற்கு எந்தவிதமான பழுதும் ஏற்படக்கூடாது என்றும் சொன்னான். முதலில் ஆர்க்கிமிடீஸ்க்கு அதை எப்படிக் கண்டு பிடிப்பது என்றே தெரியவில்லை. அதே சிந்தனையுடன் ஆர்க்கிமிடீஸ் குளிக்கச் சென்றார். தண்ணீர் நிரம்பிய தொட்டிலுள் இறங்கியவுடன் தண் ணீர் மட்டம் உயர்ந்து சிறிதளவு தண்ணீர் வெளியே வழிந்ததைக் கண்டார். உடனே அவருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. "யுரீக்கா! யுரீக்கா!" (கண்டுபிடித்துவிட்டேன்! கண்டு பிடித்து விட்டேன்) என்று கூறிக் கொண்டே தண்ணீர்த் தொட்டியில் இருந்து எழுந்து ஓடினாராம்.

ஆர்க்கிமிடீஸ் செய்தது இதுதான். ஒரு சிறு தொட்டியில் நீரை நிரப்பி கிரீடத்தை அதனுள் மூழ்கும்படி செய்தார். அதனால் வெளியேற்றப்பட்ட தண்ணீரின் எடையை அளந்து கொண்டார். பின்னர் கிரீடத்தின் எடைக்குச் சமமான சுத்தத் தங்கத்தை எடுத்து நீர் நிரம்பிய மற்றொரு தொட்டியில் மூழ்கும் படி செய்தார். அதனால் வெளியேற்றப்பட்ட தண்ணீரின் எடையையும் கணக்கிட்டார். கிரீடமும் சுத்தமான தங்கமாக இருந்ததால் இரு எடைகளும் ஒன்றாக இருக்க வேண்டும் என்றார்? ஆனால் அவ்விதம் இல்லை. ஆதலால் கிரீடம் சுத்தமான தங்கத்தால் செய்யப்பட்டது அல்ல. என்று முடிவு செய்தார்.

இதிலிருந்து ஓர் அரிய விஞ்ஞான உண்மையையும் இவர் வெளியிட்டார். "ஒரு திடப் பொருளுக்கு காற்றில் இருக்கும் எடையை விட திரவத்தில் இருக்கும் எடை குறைவாக இருக்கும். இவ்விரு எடைகளுக்குள்ளும் உள்ள வித்தியாசம் திடப்பொருளால் வெளியேற்றப்பட்ட திரவத்தின் எடைக்குச் சமன்." இது தான் ஆர்க்கிமிடீஸின் தத்துவம் ஆகும்.

கணிதத்தில் மட்டுமன்றி வானவியலிலும், பௌதீகத்தில் பல துறைகளிலும் ஆர்க்கிமிடீஸ் ஆராய்ச்சி செய்து பல அரிய உண்மைகளை உலகுக்கு தந்துள்ளார். கி.மு 212ல் சைரக் யூசை உரோமோனியர்கள் கைப்பற்றியபோது இவர் அவர்களால் கொல்லப்பட்டார்.




# தட்பவெப்பம்


இந்தியாவில் மிகவும் மாறுபட்ட தட்ப வெப்ப நிலைகள் காணப்படுகின்றன. தென்னிந்தியா வெப்ப மண்டலத்தில் உள்ளது. வட இந்தியா மித வெப்பமண்டலத்தில் அமைந்திருக்கிறது. இமயமலைச் சிகரங்கள் பலவற்றில் எப்போதும் பனி உறைந்திருப்பதால் அங்கு ஆர்ட்டிக் சமுத்திரத்தின் குளிர் நிலையைக் காணலாம். மேகாலையா மாநிலத்தில் செரபுஞ்சி என்ற இடத்தில் ஆண்டு முழுவதும் மழை பெய்யும். இங்கு ஓராண்டில் பெய்யும் மழையின் சராசரி அளவு 429 அங்குலம். உலகிலேயே மிக அதிகமாக மழைபெய்யும் இடம் இது தான். ஆனால் தார் பாலைவனத்தில் ஓராண்டில் 4 அங்குலத்திற்கு மேல் மழை பெய்வதில்லை. கோடையில் அங்கு அனல் காற்று வீசும்.

இந்தியாவில் முக்கியமாக இரு பருவக் காற்றுகள் மழை பெய்யக் காரணமாய் இருக்கின்றன. முதலாவது தென்மேற்குப் பருவக் காற்று இது யூன், யூலை மாதங்களில் வீசுகின்றது. இதனால் தென்னிந்தியாவின் மேலைக் கரையோரம், இமயமலைச் சாரல், ஆசாம் மலைகள் ஆகிய பகுதிகளில் ஏராளமாக மழை பெய்கின்றன. மற்றொன்று வடகிழக்கு பருவக்காற்று. இது அக்



டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் இது தென்கிழக்கு இந்தியாவுக்கு மழையைக் கொண்டு வருகின்றது.

# அடைகாக்கும் பெட்டி



கோழி அடைகாப்பதால் முட்டையில் குஞ்சு வளர்ந்து வெளியே வருகிறது. ஆனால் கோழி அடைகாக்காமலேயே முட்டையிலிருந்து குஞ்சு பொரிப்பதற்கு உதவும் சாதனம் ஒன்று உண்டு. அதுதான் அடைகாக்கும் பெட்டி.

முட்டையில் குஞ்சு வளர்வதற்குப் போதுமான அளவுக்கு வெப்பம் வேண்டும். கோழி அடைகாக்கும் பொழுது அந்த அளவுக்கு வெப்பம் உண்டாகிறது. அடைகாக்கும் பெட்டி அதே வெப்பத்தை செயற்கை முறையில் அளிக்கிறது.

முட்டைகளை ஒரு தட்டில் அடுக்கி அதனுள் வைத்து விடுவார்கள். பெட்டியின் முன்புறம் கண்ணாடியால் ஆனது. அதன் வழியாகப் பெட்டிக்குள் வெளிச்சம் செல்லும். மின்சாரத்தின் உதவியால் பெட்டியின் உட்புறம் வெது வெதுப்பாக இருக்கும்படி செய்வார்கள். பெட்டிக்கு அதிகமான வெப்பமும் கூடாது. அதிகக் குளிர்ச்சியும் கூடாது. நம் அறையின் சாதாரண வெப்பநிலையை விட அதிகமாக இருக்க வேண்டும். ($38.5^0$) பெட்டியினுள் சூடு ஏறாமலும், இறங்காமலும் ஒரே அளவாக இருக்கும்படி செய்யக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவர 21 நாள்கள் ஆகும். அதுவரை அடிக்கடி முட்டைகளைப்புரட்டி வைக்க வேண்டும். ஒரே சமயத்தில் நூற்றுக் கணக்கான முட்டைகளை வைத்து குஞ்சுபொரிக்கச் செய்யலாம்.

குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் பெட்டியின் முன்பக்கத்தில் உள்ள கண்ணாடி வழியாக வரும் வெளிச்சத்தை நோக்கிச் செல்லும். தட்டின் விழிம்பிற்குச் சென்றதும் அதற்கு அடியில் உள்ள மற்றொரு தட்டில் அவை விழுந்து விடும். அங்கிருந்து அவற்றை வெளியே எடுத்துக் கொள்ளலாம்.

# பொருளாதாரத் தடை பதினொரு ஆண்டுகள்

**கடந்த வாரத் தொடர்ச்சி.....**

01. ஜாம் போத்தல் சிக்கன விளக்கு
02. பெற்றோல், டீசல் வாகனங்கள் மண்ணெண்ணெயில் இயக்கம்
03. இரட்டைச் சூட்டடுப்பு
04. மிதிவண்டி டைனமோவில் வானொலி கேட்டல்
5. சாம்பலில் பனங்காயில் உடுப்புத் தோய்த்தல்
6. உப்புச் சேர்த்து மின்னகல புனரமைப்பு
7. மண்ணெண்ணையில் இருந்து உயர் பற்று எரிபொருள் பிரிப்பு
8. அரிக்கன் லாம்பு கோழி அடைப் பொறி
9. துப்பாக்கி எண்ணெய்
10. மூலிகை ரணிக்கற் மருந்து
11. சைக்கிள் டைனமோ டோச்
12. டீசல் இயந்திரங்கள் தேங்காய் எண்ணெய் மூலம் இயக்குதல்
13. உராய்வு நீக்கி எண்ணெயாக தாவர எண்ணெய் வகை
14. சுண்ணாம்புக் கட்டுமானம்
15. பயிரமுது உரம்
16. ஆக்கி வாயு
17. உயிர்வாயு

**ஜாம் போத்தல் சிக்கன விளக்கு**

1990ல் பொருளாதாரத் தடையை ஸ்ரீலங்கா அரசு வட தமிழீழம் மீது நடைமுறைப்படுத்தியது. இந்தத் தடையால் பாதிக்கப்பட்ட முதல் விடயம் இரவில் ஒளி பெறல். ஏனெனில், வடதமிழீழத்துக்கு மின்சாரம் அரசால் 1990லேயே துண்டிக்கப்பட்டு விட்டது. அத்துடன் பெற்றோல், டீசலுக்கும் தடை விதிக்கப்பட்டு விட்டது. மண்ணெண்ணை மட்டும் அரச செயலகத்தின் ஊடாக மட்டுப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

மக்களுக்கு மாதமொன்றுக்கு ஒரு லீற்றர், அரை லீற்றர் மண்ணெண்ணை மட்டுமே வழங்கப்பட்டது. சில கறுப்புச் சந்தைகளில் ஒரு லீற்றர் மண்ணெண்ணை 300 முதல் 400 ரூபா வரை இருந்தது.

இந்த நிலையில் அரிக்கன் லாம்பை விட குறைந்த மண்ணெண்ணையில் எரியக் கூடிய விளக்கு தேவைப்பட்டது.

இந்த நிலையில் ஜாம் போத்தலுள் ஒரு கம்பியை தொங்க விட்டு அதில் சைக்கிள் ரியூப் வால்க் கட்டையை பொருத்தி அதில் திரி பொருத்தி யாரோ ஒருவரால் சிக்கன விளக்கு உருவாக்கப்பட்டது. மிகக் குறைந்த மண்ணெண்ணையில் அது ஒளிர்ந்தது. திரிக்கு மண்ணெண்ணை எட்டாத போது நீர் விடப்பட்டு மண்ணெண்ணையின் மட்டம் திரிக்கு அண்மையாகக் கொண்டு வரப்பட்டது. நீரை விட மண்ணெண்ணை அடர்த்தி குறைந்தது. அதனால் நீரை விட மண்ணெண்ணை மட்டம் உயர்ந்தது. இது அறிவியல் அடிப்படை.


இதைவிட இந்த விளக்கில் பயன்படுத்தப்பட்ட மற்றொரு இரசாயன நுட்பமே முக்கியமானது. ஜாம் போத்தல் விளக்கினுள் மண்ணெண்ணெய் எரியும் அளவைக் குறைக்க உப்பு அதனுள் போடப்பட்டது. இந்த நுட்பமாகும். இதனைச் செய்த உரித்தாளரும் யார் எனத் தெரியாது. உப்பில் சோடியம் குளோரைட் உள்ளது. இத்துடன் உப்பில் சோடியம் அயன் நிலையில் உள்ளது. இது இலகுவில் எரியத்தக்கது. ஒரு தீச்சுடர் கிடைத்திடும் நிலையில் உப்பில் உள்ள சோடியம் அயன் மஞ்சள் சுடருடன் எரியும்.

மண்ணெண்ணெய் விளக்கில் திரி உப்பில் உள்ள சோடியம் அயனைப் பெற்று மஞ்சள் நிறச் சுடருடன் எரிகின்றது. இதற்கு திரியுடன் சிறிதளவு எரிபொருள் நனைந்திருந்தால் மட்டும் போதுமானது. இந்த ஜாம் விளக்கில் உப்புப் போடப்பட்டது. அந்த விளக்கு மிகக் குறைந்த எண்ணையுடன் தமிழீழ மக்களுக்கு இரவில் ஒளியூட்டியது. ஜாம் போத்தல் விளக்கின் மிகு சிறப்பு உப்பு மட்டுமே.

(தொடரும்.....)

# கோட்டை

பண்டைக்காலத்தில் பகைவர்களிடம் இருந்து தம்மையும், தம் மக்களையும் அரசர்கள் பாதுகாக்க வேண்டியிருந்தது. இதற்காக பல வசதிகளை உடையதும் பகைவர் எழிதில் அணுக முடியாததுமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு செயற்கை முறைகளில் அரண்கள் அமைத்தார்கள். இவ்வாறு அரண் அமைத்த இடத்திற்கு கோட்டை என்று பெயர்.




மண்சுவர் எழுப்பியும், கருங்கற்கள் அல்லது செங்கற்களால் உயர்ந்த சுவர்கள் கட்டியும் கோட்டைகளை அமைத்தார்கள். இங்ஙனம் அமைக்கப்பட்ட கோட்டையை பகைவர்கள் எழிதில் நெருங்க முடியாது.

இந்தியாவில் பல பகுதிகளில் பழங்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகள் இருக்கின்றன. தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் கோட்டையின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் பண்டை நகர் கோட்டையின் அமைப்பு விரிக்கப்படுகிறது. இந்தியாவில் சென்னை, செஞ்சி, திருச்சி, திண்டுக்கல், ஆர்க்காடு, வேலூர், தௌலதாபாத், குவாலியர், அலகாபாத், ஔரங்கபாத் ஆகிய நகரங்களிலுள்ள கோட்டைகளும், டெல்லி செங்கோட்டையும் வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பெரிய கோட்டைகள் பல உள்ளன.

விஞ்ஞானம் வளர வளர கோட்டையின் முக்கியத்துவம் குறைந்து விட்டது. இன்று விமானங்களாலும், வெடி குண்டுகளாலும் மிக வலிமையான கோட்டையையும் அழித்து விட முடிகிறது.

எனவே இக்காலத்தில் கோட்டைகள் கட்டுவதில்லை. முன்பு கட்டப்பட்ட கோட்டைகள் இன்று வரலாற்றுச் சின்னங்களாகக் பாதுகாக்கப்படுகின்றன.



படத்தில் உள்ள விந்தையான விலங்கைப் பாருங்கள் பன்றி போல இருக்கிறதல்லவா? அர்த்வர்க் என்றால் நிலப்பன்றி என்று பொருள்.

இதன் உடல் பருத்துக் கனமாக இருக்கும். தலை சிறியது. காது பெரியது. முகம் ஒரு குழாய் போல நீண்டிருக்கும். கால்கள் உறுதியானவை. இதன் நாக்கு நீளமானது; பசையுள்ளது. அர்த்வர்க் நிலத்தில் குழிதோண்டி அக்குழியில் வாழும். பகல் முழுவதும் தூங்கி இரவில் தான் வெளியே வரும். கறையான், எறும்பு ஆகியவற்றை உண்ணும். இது தன் வலிமையான கால்களால் கறையான் புற்றைச் சிதைக்கும். நாக்கை நீட்டிக் கறையான்களைப் பிடித்துத் திண்ணும். இது ஆபிரிக்காவில் மட்டும் காணப்படுகிறது.

## சிறுகதை

# சுழி

யாழ் நிலத்தின் அடர்வனப் பகுதி....... அதிவிடியலின் இருட்டு. ஹோலண்ட் நாட்டின் டச்சுப்படை அதிகாரி கேர்ணல் வான்ஸ்டைமன் துரத்தப்பட்டுக் கொண்டிருந்தான். இருளில் மரங்களில் மோதி விழுந்தான். வாயால் சுவாசித்தான். சக்தியற்று விழுந்தான்.

ஒன்றும் புரியவில்லை. ஞாபகத் தொடர்கள் அறுந்தன.... தூரத்தே பீரங்கி முழக்கம் கேட்டது. தாகம் வரட்டியது. உடலில் இரத்தம் அப்பி மசமசத்தது. உணரும் இடமெல்லாம் வலித்தது. கண்கள் இருட்டின. விழுந்த வான்ஸ்டைமன் உயிர்ப் பயத்தால் உந்தி எழுந்தான். முடியாமல் விழுந்தான். மண்டியிட்டு ஊர்ந்தான். இலக்கின்றித் தவழ்ந்தான்.குதிரைகளின் கனைப்புக்கள் பயங்கரமாய்க் கேட்டன.

இரண்டாம் எல்லாள மன்னரின் தமிழ்ப்படை வீரர்கள் தேடி வருகின்றார்கள். தீப்பந்தங்கள் நெருங்கின. ..இவனைத் தேடுகிறார்கள். ..தமிழ்க்குரல்கள் அருகே கேட்டன. வான்ஸ்டைமன் மூச்சின்றிப் பதுங்கினான். அடர் புதரில் புகுந்தான். உயிர்ப்பயம் எல்லாப்பயத்தையும் வென்றது. அப்படியே கிடந்தான்.

குதிரைகள் கனைத்து திரும்பின. தீப்பந்தங்கள் ஒளி குறைந்தன.... திரும்பிப் போகிறார்கள். கொஞ்சம் உயிர் நம்பிக்கை வந்தது. யாழ் மண்ணில் அசைக்கமுடியாத டச்சுக் கோட்டையின் கட்டளை அதிகாரி புதரில் கிடப்பதும் யோசிப்பதும் அவனுக்கே புதுமையாயிருந்தன.

பலம் வாய்ந்த டச்சுக் கோட்டை இரண்டாம் எல்லாள மன்னிடம் திடீரென வீழ்ந்ததும் ஒல்லாந்து வீரர்கள் சிதறி ஓடியதும் கனவு போலத்தான் இருந்தது. ஆனால் நிஜம். வான்ஸ்டை மனுக்கு மறுபடி மரணபயம் வந்தது. இன்னும் சிறிது நேரத்தில் விடிந்து விடும்........ வெளிச்சம் பரவி விடும். இது எந்த இடமோ தெரியவில்லை. இவனை உடனேயே அடையாளம் காண்பார்கள். செம்பட்டைத் தலையும் சிவப்பு உடம்பும் .....உடன் எழுந்தான். இரைத்தது. விடிவதற்குள் போய் விடவேண்டும். உத்தேசத்திரையில் நடந்தான். வலிக்க வலிக்க நடந்தான்.

சிலீரென ஓடை குறுக்கிட்டது. கால்களை நனைத்தான். நீரை அள்ளி அள்ளிக் குடித்தான். கொஞ்சம் தெம்பு வந்தது. தாமதிக்காது ஓடையைக்கடந்தான். எஞ்சிய பலத்தைக் கூட்டி விரைந்தான்.

வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. வான்ஸ்டைமன் ஊகித்த திசை ஓரளவு சரியாகவே இருந்தது. ஒன்றிரண்டாய் குடிசைகள் தெரிந்தன. பதுங்கி நடந்து வெகு யாக்கிரதையாய் கிராமத்தை நெருங்கினான். தூரத்தே மாரியம்மன் கோயில் கோபுரம் தெரியவே வான்ஸ்மனுக்கு இது நகர்ச்சேரி என்பது விளங்கிவிட்டது. டச்சுக் கோட்டையிலிருந்து சுமார் ஏழு மைல்களுக்கப்பால் இது இருக்கிறது. உடனே வான்ஸ்டை மனுக்கு தான் செல்ல வேண்டிய திக்குத் தெரிந்து விட்டது.

விரைவாகத் திரும்பி கோயில் பக்கமாக ஓட ஆரம்பித்தான்.எல்லாள மன்னரின் படைவீரர்கள் எந்நேரமும் குறுக்கிடும் அபாயம் இருந்தது. பொது மக்கள் கண்டாலே காட்டிக் கொடுத்து விடுவார்கள். கூடியவரை பனங்காட்டுப் புதர்களூடாக நடந்தான். கறுப்பு மண்ணை அள்ளி முகத்திலும் கைகளிலும் லேசாகப் பூசிக்கொண்டான். ஆனால் 'யார் அங்கே..?

அதட்டலாக ஒலித்த திடீர் குரலால் திடுக்கிட்டான். உடனே கைகளைத் தூக்கினான்... மரணப் பீதி உச்சியைத் தொட்டது. மெதுவாக அனிச்சையாகத் திரும்பினான். குரலுக்குரிய உரவம் இவனை நெருங்கியது.

மொட்டைத்தலை.. கறுத்த பாரிய உடம்பு.... எங்கும் திருநீறு...! பூநூல்....! கைகளில் அதிகாலைப் பூக்கள்... மாரியம்மன் கோயில் குரு.

' என்ன தாங்கள் வான்ஸ்டைமன் அல்லவா?

தன்னை ஒரு கோயில் குரு சந்தேகமற இனங்கண்டு கொண்டார் என்பதை தனது பெயரை அவர் உச்சரித்த விதத்திலேயே உணர்ந்து திகிலடைந்தான். வான்ஸ்டைமன்.

இருவரும் நெருங்கியதும் அசைவற்று நின்றனர். ஏதும் பேசத்தொடங்கும் முன்னரே பெரும் பனைக் காட்டை ஊடுருவியபடி சில புரவிகள் பரந்து வருவது தூரத்தே தெரிந்தது. எல்லாள மன்னரின் வீரர்கள்.... வருகிறார்கள்.

வான்ஸ்டைமன் திகிலுடன் குருவைப் பார்த்தான். வான்ஸ்டைமன் கதறலுடன் திடீரென குருவின் காலடியில் விழுந்தான். கால்களைக் கட்டிப்பிடித்தான்.

கறுப்புக்கால்களில் வெள்ளை முகத்தைத் தேய்த்தான். விழி நீரால் நனைத்தான்.

'க.... காப்பாற்றுங்கள்...குருவே.....' டச்சு மொழியில் முனகிக் கத்தினான். .. தீனமாக உயிர் இரக்கும் இந்தக் குரல் .... இந்தக் குரல்... ம் ? குரு எங்கேயோ... எப்போதோ, கேட்ட மாதிரி உணர்ந்தார். ஒரு யுகத்தின் முன்னரோ....... குரு திடுக்கிட்டார். கீழே குனிந்து அவனது விழிகளைப் ............

அதன் பின்னர்.01.05.1888

..........பார்த்தார் அர்ச்சகர்... புதுமையாக இருந்தது. இது பிரிட்டிஸாரின் காலம். பழைய ஒல்லாந்துக் காலமல்ல. நவீனத்துவ காலம். ஆயினும் ஒரு வெள்ளைக்கார பிரிட்டிஸ் கட்டளை அதிகாரி கப்டன் மார்க்ஸ்வெல் ஒரு சாதாரண கோயிலின் கறுப்பு அர்ச்சகரின் கால்களில் .........

கோர்ணல் மார்க்ஸ்வெல்லின் பரிதாப விழிகள் காப்பாற்றச் சொல்லிக் கெஞ்சின. அவனது விழிகளில் தெரிந்த ஏதோ ஒன்று பல யுகங்களுக்கு முன்னரும் இவ்வாறே ஒரு சம்பவம் வேறு சூழலில் நடைபெற்றதாக ஞாபகப்படுத்தியது. எனினும் கோர்வையாக நினைவு வரவில்லை. நிச்சயமாக இதோ கெஞ்சிய விழிகளைப் பார்த்திருக்கிறார். யுக யுகாந்திரமாய் தொடரும் 'விழியீர்ப்பு விசை' யா இது....?

சிந்திக்க நேரமில்லை.வன்னி மன்னர் பண்டார வன்னியரின் கிளர்ச்சி வீரர்கள் ஆங்கிலேயப் படைகளிடமிருந்து கைப்பற்றிய ஜீப்புகளில் வன்னிக்காட்டை ஊடுருவியபடி நெருங்கிக்கொண்டிருந்தனர்.

அர்ச்சகர் துரிதமாக செயற்பட்டார். காலடியில் மயங்கிக் கிடந்த கப்டன் மார்க்ஸ் வெல்லின் மீது தன் நீண்ட காவியை உருவிப் போர்த்தினார். சில புதர்களைச் சாய்த்து மறைத்தார்

விரைவாக புதரை விட்டு வெளியே வந்தார். சாதாரணமாகப் பூப்பறிக்க ஆரம்பித்தார்.

ஜீப் உரசியபடி நின்றது. கிளர்ச்சிப் படைக் கப்டன் அர்ச்சகரை உற்று நோக்கினான். அவனது விழிகளின் தீட்சண்யத்தில் அர்ச்சகரின் பார்வை தாழ்ந்தது. மார்பில் புலித்தலைப் படமிட்ட சீருடை அணிந்திருந்தான். வாளும் துப்பாக்கியும் இருந்தன.

'அர்ச்சகரே, ஒரு வெள்ளைக்காரன் ஓடிவந்தவனா? '

அதிகாலையிலேயே ஒரு அர்ச்சகர் தன் இனத்து வீரர்களிடம் பொய்பேசுவதா?

' ஓடி வந்ததைப் பார்க்கவில்லை அப்பா!' என்றார் சாதுரியமாக அவ நம்பிக்கையுடன் அர்ச்சகரைப் பார்த்தான். தலைவன். அவனது கண்களைப் பார்த்ததும் அவற்றில் தெரிந்த யுகாந்திரப் பகையுணர்ச்சியில் வெல வெல்த்துப் போனார். உடனே தலைவன்

'சரி எடு...!' என்று கத்தியதும் வீரர்கள் விரைந்து ஜீப்பில் ஏறினர். வாகனம் சென்று மறைந்த போது தலைவன் திரும்பிப் பார்த்தது தெரிந்தது.

## என். ஏ. தீரன்

அர்ச்சகர் விரைந்து செயற்பட்டார். கப்டனைத் தூக்கியும் இழுத்தும் வந்தார். கப்டன் இயலாமையுடன் ஒத்துழைத்தான். கோயில் கதவுகளைத் திறந்தார். கப்டனின் விழிகளில் தெரிந்த அந்த யுகாத்திரத் தொடர்பலையை மறுபடி பார்க்க ஆவலுற்றார். அறியாமையால் ஆவலுற்றார் கோயில் உள் மண்டபத்தினுள் கப்டனை கொண்டுவந்தார்.

கோயில் கதவுகளைத் தாழிட்டார். கர்ப்பக் கிரகத்தின் வலது பக்கக் கதவினூடே கப்டனைத் தாங்கிச் சென்றார். சாய்த்து வைத்தார். நீரருந்தக் கொடுத்தார். 'ஸ்லோஹம்' ஓதி ஊதினார். நெற்றியில் திருநீறு இட்டார். சற்றே விசிறினார்.

கப்டன் மார்க்ஸ்வெல்லி சற்று தெம்படைந்தான். முனகி எழுந்தான். மறுபடி அர்ச்சகரின் கால்களைப் பிடித்தான்.

'கால்களை விடுங்கள் கப்டன் மார்க்ஸ்வெல்' என்ற அர்ச்சகர் விலகி நின்றார். கப்டனின்கண்களை நோக்கினார்.

' நான் இதற்கு முன் தங்களை சந்தித்திருக்கின்றேனா பிதாவே? '

திடீரென ஆங்கிலத்தில் கேட்டான் கப்டன்.

'ஞாபகமில்லை ஆனால் கப்டனை எனக்குத் தெரிந்திருக்கின்றது. ' அர்ச்சகரும் இலக்கணச் சுத்தமாக ஆங்கிலத்தில் விடையிறுத்தும் கப்டன் மேலும் அதிர்ந்துதான் போனான்.


'மதிப்பிற்குரிய பிதாவே! தமிழ்க் கிளர்ச்சி வீரர்களிடமிருந்து காப்பாற்றி எனக்கு உயிர்ப்பிச்சை யளிப்பீர்களா?

'என்னால் எப்படி முடியும் கப்டன்?'

'அப்படியானால் முடியாதா?

'அவர்கள் முதலில் என்னையல்லவா கொன்றுவிடுவார்கள் அதன்பின் தங்களை எப்படிக் காப்பாற்ற முடியும் கப்டன்?

கப்டன் மார்க்ஸ



வெல்லுக்குத் தம் இருவரினதும் தற்காலிக உயிர்நிலை உறைத்தது. அர்ச்சகர் தான் வலிந்து தேடிக்கொண்ட வினையுடன் காத்திருந்தார். என்ன செய்வ தென்று தெரியவில்லை. பூஜைக்கும் நேரமாகின்றது. மௌனம் இறைந்து கிடந்தது. பூஜைக்கு சனம் வராது. போர் நடக்கிறது. கோவிலின் வெளியே வாகனச் சத்தம்.... புரவிக்குளம் பொலிகள்... தமிழ் குரல்கள் .... பண்டார வன்னிய மன்னரின் வீரர்கள் .... பிரித்தானியர் முகாமிட்டிருந்த 'நாக் சேர்ச்' கோட்டை கிளர்ச்சியாளரிடம் விழுந்து விட்டமை சந்தேகமறப் புரிந்தது. இனித் தப்புவதற்கு எவ்வித வழியும் இருப்பதாகத் தெரியவில்லை.

சட்டென அர்ச்சகர் எழுந்தார்.

'கப்டன் மார்க்ஸ்வெல்! இனி யோசிப்பதற்கு எதுவுமில்லை. நான் கோவிலைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்று மாலையானதும் கொஞ்சம் உணவுடன் வருகிறேன். அதுவரை அங்கேயே படுத்திருங்கள். இரவு சாப்பிட்டு விட்டு இருளினூடே கோயிலை விட்டும்.....'

'வெளியேறி விடுகிறேன்...' உடனே சொன்னான் கப்டன் மார்க்ஸ்வெல்.

ஆனால்-

படபடவென கோவில் கதவு பலமாகத் தட்டப்பட்டது. பலவந்தமாகத் தட்டப்பட்டது. அர்ச்சகர் விதிர்விதித்துப் போனார். உடனே கப்டன் மார்க்ஸ்வெல் ஒரு பாய்ச்சலில் மூலஸ்தானத்திற்குள் புகுந்தான். விக்கிரகத்தின் பின்னால் மறைந்தான்.

தட்டப்பட்ட கதவுகள் ஆடின. கலகலத்தன.... அர்ச்சகர் பயத்தால் உந்தப்பட்டு நடுங்கும் கரங்களால் கதவைத்திறக்க-

............ஆவேசமாகப் புகுந்தனர்.வன்னி மன்னரின் கிளர்ச்சிவீரர்கள். தலைவன் அர்ச்ச கரைத் தன் குத்தீட்டி விழிகளால் ஊடுருவிப்..... பார்த்தான். நள் வரிகளில் சீருடையும் சயனைட் குப்பியும் நவீனரகத் துப்பாக்கியுடனுமிருந்த படையணிப் பொறுப்பாளன்.

அருகே வந்தான். ஐயரை அவநம்பிக்கையுடன் பார்த்தான். இவனை எங்கோ கண்டது போல இருந்தது. அவனா இவன்...?

'ஐயரே, நாங்க கச்சேரி இந்தியப் படைமுகாமைக் கலைச்சிட்டம் லெப் .வீரேந்திரநாத் மட்டும் தப்பிற்றான். வெளிய எண்டால் காணேல்ல கோயிலுக் குள்ளேயும் ஒருக்கால் பாத்துடுவமெண்டு வந்தநாங்கள்!'

ஐயர் விதிர் விதிர்த்துப்போய் நாக் குழறி...

'இ....ஞ்ச வந்தவரே..... எ...ப... ஒருத்தரும் வரேல்ல.... நீ... நீங்க பாக்கிற தெண்டால் பாருங்கோ தம்பிமார்.....' சிரிக்கமுயன்று இளித்தார். குடுமியை ஆட்டினார். பற்கள் நடுங்கின. பொறுப்பாளர் ஒரு வினாடியோசித்தான். விழிகளை சுற்றிலும் அலையவிட்டான். மூலஸ் தானத்தை நோக்கினான்.

'ஆள் ஒழிய நல்ல இடமெல்லோ இது'

அதை நோக்கி நடந்தான். நெருங்கி உள்ளே எட்டிப் பார்த்தான். ஐயரைப் பார்த்தான் அடிவயிறு எரிந்தது. சடடெனத் திரும்பி வந்தான்.

'ஐயரே'

என்றான். இவனது பூர்வ ஜென்ம விழிகளின் ஈர்ப்பில் ஐயருக்கு ஜன்மப்பகையுணர்வு பீறிட்டது.

'சரி போவமென்ன..... ஐயரே மன்னிச்சுக் கொள்ளுங்கோ!'

பொறுப்பாளன் வெளியே நடந்தான். தீவிரவாதிகள் தொடர்ந்தனர்.ஜீப் கிளம்பியது. அனைவரும் போனது உறுதியானதும் ஐயர் மறுபடி கதவை பூட்டினார் மூலஸ்தானத்தை நோக்கி ஓடினார்.

"மாரியம்மா!..மாரியம்மா...!" என்றார். பச்சடித்த பல்லி போல ஒடுங்கிக் கிடந்த லெப்.வீரேந்திரநாத் ஊர்ந்து வெளியே வந்தான். பயத்தினால் விழிகள் வெளுத்திருந்தன.

ஊருக்கு அபயம் தேடிக் கொஞ்சும் அவனது விழிகளை நோக்கிய ஐயர் அவற்றின் ஈர்ப்பில் அதிர்ந்து போனார்.

'இவன் ......வான்ஸ்டைமன்னா? மார்க்ஸ்வெல்லா?

'அவர்கள் ....போய்விட்டார்களா?' இந்தியில் நாக்குழறியபடி கேட்டான் லெப். வீரேந்திரநாத்.

'போட்டு வந்தாலும் வருவினம்' என்ற ஐயர் வியர்த்தார். லெப். வீரேந்திரநாத் தடுமாறி எழுந்து நின்றான்.

'மேரே...பேட்டாஜீ!' என்று கால்களில் விழுந்தான். கட்டிப்பிடித்தான். ஹிந்தியில் ஏதோ சொல்லி அரற்றினான்.

'ஐயோ, மாரியம்மா தாயே! ' என்ற ஐயர் சற்றே நகர்ந்து 'எழுந்து நில் லெப். வீரேந்திரநாத்!' என்று சரளமான ஹிந்தியில் கூறினார். வெகு ஆச்சரியமாக எழுந்த லெப்.வீரேந்திரநாத்-

'நா...ஷோட்! மேரே பேட்டாஜீ! என்னை தெரியுமா?

உங்களுக்கு.......? என்றான்.

'எப்போதோ சந்தித்த ஞாபகம். என்றார் ஐயர். லெப்.வீரேந்திரநாத் அந்தப் பய வேளையிலும் வியர்த்தான்.

'எ....ன் பெயர் எப்படி உங்களுக்கு?

'ஏதோ அப்படித்தானிருக்குமென்று தோன்றியது'

'மேரே பேட்டாஜீ! இருட்டானதும் போய் விடுகிறேன்.

இந்த உதவியை என் சொந்த போடாவும் செய்திருக்க மாட்டார். க்யா் பேட்டாஜீ! முன்னரும் எப்போதோ இரண்டொரு தடவைகள் நீங்கள் என்னைக் காப்பாற்றியது போல் ஒரு எண்ணம் வருகின்றது ஜீ ! இது இந்த மாரியம்மா வேலையா பேட்டாஜீ?'

அவனுக்குள்ளும் அதே போலொரு உணர்வோட்டம் நிகழ்வதை உணர்ந்த ஐயர் மேலும் வியப்புற்று -

'இருக்கலாம் .லெப். வீரேந்திரநாத்! நான் உன்னைக் காப்பாற்றி அனுப்பினேனா? அல்லது இருவருமே கொல்லப்பட்டோமா என்பதில் எனக்கு சந்தேகமாக இருக்கின்றது.'

என்று கூறிவிட்டு தற்செயலான உந்துதலால் எதிரேயிருந்த யன்னலை பார்த்... உடன், விழி பிதுங்கினார். பீதியால் உதடுகள் காய்ந்தன.. நெஞ்சடைத்தது. சட்டென லெப். வீரேந்திரநாத்தும் திரும்பிப் பார்த்தான் உறைந்து போனான்.

யன்னல் வழியே-

பிஸ்டலை நீட்டியபடி நின்ற விடுதலைப்படைப் பொறுப்பாளனின் கூரிய இருவிழிகளும் இவர்களிருவரையும் இமைக்காமல் பார்த்து......

மறுபடியும் 01.05.2088 தொடரக்கூடும்.

(முற்றும்)

# வங்காளதேசத்தில் வேலை நிறுத்தப் போராட்டம்
# பொலிசார் விரட்டி அடித்து கண்ணீர்ப்புகை

(தாகா)

வங்க தேசத்தில் எதிர்க்க ட்சிகள் நடத்திய மூன்று நாள் வேலை நிறுத்தம் வன்முறையில் முடிந்தது. போராட்டக்காரர்களை விரட்ட பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். தடியடி நடத்தினர். இதில், 25 பேர் காயமடைந்தனர்.



வங்கதேசத்தில் கடந்த வாரம் நடந்த எதிர்க்கட்சிப் பேரணியில் வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. இதில், முன்னாள் நிதி அமைச்சர் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

இதைக் கண்டித்து முக்கிய எதிர்க் கட்சியான அவாமிலீக் தலைமையிலான கூட்டணி கட்சிகள் நேற்று முதல் மூன்று நாட்களுக்கு வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்து இருந்தனர். இந்தப் போராட்டத்துக்கு வர்த்தக அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

வங்கதேசத்துக்கு ஆடை ஏற்றுமதி மூலம் ஏராளமான அன்னிய செலாவணி கிடைத்து வருகின்றது. எனவே, வங்கதேச ஆடை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் சங்கமும் இந்தப் போராட்டத்தை கைவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தது.

எனவே, திட்டமிட்டபடி மூன்று நாள் வேலை நிறுத்தத்தை எதிர்க் கட்சிகள் நேற்றுமுன்தினம் தொடர்ந்தன. தலைநகரான டாக்காவில் நேற்று முன்தினம் பாடசாலைகள், கடைகள், தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டன. வன்முறையைத் தடுக்க ஏராளமான பொலிசாரும், துணை இராணுவப் படையினரும் குவிக்கப்பட்டனர்.

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டனர். டாக்காவின் புறநகர் பகுதியில் சிலர் பெற்ரோல் குண்டுகளை வீசி வாகனங்களை எரிக்க முயன்றனர். அவர்கள் மீது பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

சிலர் பேரணியாகச் செல்ல முயன்றனர். தடியடி நடத்தி பொலிசார் அவர்களை அப்புறப்படுத்தினர். இதில், 25 பேர் காயமடைந்தனர்.

கடந்த ஒரு வாரத்தில் முக்கிய எதிர்க்கட்சியான அவாமிலீக் இது போன்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா
# அமெரிக்க நிகழ்வில் பங்கேற்பு



அமெரிக்காவில் மிகவும் பிரபலமான கலந்துரையாடல் நிகழ்ச்சியான டேவில் லெட்டர்மேனின் லேட் ஷோ நிகழ்ச்சியில் முன்னாள் உலக அழகியும், பிரபல இந்தி நடிகையுமான ஐஸ்வர்யாராய் அடுத்த வாரம் பங்கேற்கின்றார். அமெரிக்காவில் புகழ் பெற்ற தொலைக்காட்சி நிறுவனமான சி. பி. எஸ்., லடிவிஹயே இந்த லேட் ஷோ நிகழ்ச்சியை நடத்துகின்றது. எதிர் வரும் 9ம் திகதி நடக்க உள்ள இந்த நிகழ்ச்சி ஐஸ்வர்யாராய் நடித்துள்ள பிரைடு அண்ட் பிரிஜூடிஸ் என்ற ஆங்கில சினிமா அமெரிக்காவில் வெளியாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் ஒளிபரப்பாகின்றது.

ஏற்கனவே ஐஸ்வர்யாராயிடம் மும்பையில் எடுக்கப்பட்ட 60 நிமிட பேட்டியை சி. பி. எஸ், தொலைக்காட்சி கடந்த மாதம் ஒளிபரப்பியது. இருந்தாலும், இந்த முறை அவர் நேரடியாக நியூயோர்க்கிலுள்ள எட்சல்லி வன் தியேட்டரில் அமர்ந்து டேவிட் லெட்டர் மேனுடன் தான் நடித்த முதல் ஆங்கில மொழிப் படம் பற்றி பேசுகின்றார். பிரைடு அண்ட் பிரிஜூடிஸ் என்ற ஆங்கில திரைப்ப டத்தில் ஐஸ்வர்யாராய் முதன் முதலாக நடித்துள்ளார். இந்தப் படம் பல நாடுகளில் வெளியிடப்பட்டு வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், அமெரிக்காவில் இந்தப் படம் ஐஸ்வர்யாராய் பங்கேற்கும் லேட் ஷோ நிகழ்ச்சி முடிந்து இரண்டு நாட்களுக்குப் பின்னரே வெளியிடப்படுகின்றது. பெண்ட் இட்லைக் பெக்காம் என்ற ஆங்கிலத் திரைப்படம் மூலமாக பிரபல மடைந்த குரிந்தர்சத்தா இந்த திரைப்படத்தை இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் மார்ட்டின் ஹெண்டர்சன், நவீன் ஆண்ட்ரூஸ் மற்றும், அனுபம் கெர் ஆகியோரும் நடித்துள்ளனர். ஐஸ்வர்யாராய் மேலும் இரண்டு ஆங்கிலப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

மெரில் ஸ்ட்ரீப்புடன் கேயோஸ் என்ற படத்திலும், மைக்கேல் டக்ளாசுடன் ரேஸிங்க்தி மான்சூன் என்ற படத்திலும் நடிக்க உள்ளார்.

# முப்பத்தைந்து ஆண்டுகளாக 182
# இந்தியர்கள் பாக். சிறையில் வாடும் நிலை
# சுயநினைவிழந்துள்ளதாகவும் தகவல்

(இஸ்லாமாபாத்)

கடந்த 35 ஆண்டுகளாக எந்த வழக்கும் பதிவு செய்யப்படாமல் ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர்கள் பாக். , சிறைகளில் வாடி வருகின்றனர். இவர்களில் பலர் தற்போது தங்கள் சுயநினைவை இழந்துள்ளனர்.

இது தொடர்பாக பாக்., அதிகாரிகள் தெரிவித்ததாக வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

பாக்., எல்லைக்குள் தவறுதலாக நுழைந்த ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர்கள் கடந்த 35 ஆண்டுகளாக இங்குள்ள சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் 30 பேர் முஸ்லிம்கள். மற்றவர்கள் இந்து, கிறிஸ்தவர் மற்றும் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள்.

கைது செய்தவர்களைப் பாக்., நிர்வாகம் இதுவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவில்லை. அவர்கள் மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. இவர்கள் எந்த சட்டப்பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு இருக்கின்றனர், இவர்களை விடுவிக்க பாக்., அரசு இந்திய அரசுடன் ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டதா, பேச்சு நடத்தியதா என்பதும் தெரியவில்லை. பாக்., கில் எந்தச் சிறையில் இவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இந்தியாவில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்கிற விவரமும் எங்களுக்குத் தெரியாது. கைது செய்யப்பட்டவர்களிடமே முகவரி போன்ற விவரங்களை கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றால், அவர்களில் பலர் தங்களது ஞாபக சக்தியை இழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால், இந்திய தூதரகத்திடம் 50 இந்தியர்கள் மட்டுமே தங்கள் நாட்டு சிறைகளில் உள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசும் தங்கள் நாட்டவர்கள் 54 பேர் பாக்., சிறைகளில் வாடுவதாகக் கூறி அவர்களின் பட்டியலை பாக்., அரசிடம் அளித்தது. அந்தப் பட்டியலில் உள்ளவர்களைக் கண்டு பிடிக்க பாக்., அரசு முயன்று வருகிறது. இன்னும் அவர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பாகிஸ்தான் சிறைகளில் அதிகாரிகள் தீவிர சோதனைகள் மேற்கொண்டதில் 182 இந்தியர்கள் சிறைகளில் வாடிக் கொண்டிருப்பதைக் கண்டு பிடித்துள்ளனர்.

# நடிகர் அஜித் கிரிவலம்

(திருவண்ணாமலை)

நடிகர் அஜீத், திருவண்ணாமலையில் கடந்த புதன்கிழமை இரவு கிரிவலம் சென்றார்.

அஜீத் இரசிகர் மன்ற ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் திருவண்ணா மலையில் நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக நடிகர் அஜீத், இரவு 11 மணிக்கு திருவண்ணாமலை வந்தார். பின்னர் நள்ளிரவு 1 மணிக்கு கிரிவலம் புறப்பட்டார்.

அதிகாலை 5.30 மணிக்கு கோயிலுக்கு வந்தார். அங்கு அண்ணாமலையார், உண்ணாமுலையம்மன், நவக்கிரக சன்னதிக்குச் சென்று பயபக்தியுடன் வழிபட்டார்.



கோயில் சார்பில் பரிவட்டம் கட்டி அவருக்கு முதல் மரியாதை வழங்கப்பட்டது. கோயில் பிரசாதங்களை தியாகராஜ குருக்கள், ரமேஷ் குருக்கள் ஆகியோர் வழங்கினர்.

கோயிலில் இருந்து வெளியே வந்த அஜீத் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், திருவண்ணாமலையில் கிரிவலம் வந்தது மனசுக்கு நிறைவாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. என்றார்.

# உலக செய்திகள்

## பாப்பரசர் உடல் நிலையில் முன்னேற்றம்;
## சுகம் பெறவேண்டிப் பிரார்த்தனை

(ரோம்)



போப் இரண்டாம் ஜான்பால் உடல் நிலை தேறி வருவதாக அவருக்குச் சிகிச்சையளிக்கும் டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். பாப்பரசர் ஜான் போல், ஏற்கனவே மூட்டு வலி மற்றும், பர்கின்சன் நோயால் அவதிப்பட்டு வருகின்றார். இரண்டு நாட்களுக்கு முன்னர் அவர் மூச்சு விட மிகவும் சிரமப்பட்டார். நுரையீரலுக்கு செல்லும் குழாயில் அடைப்பு ஏற்பட்டதாலும், ப்ளு காய்ச்சல் தாக்கியதாலும் உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

தற்போது அவர் ரோமில் உள்ள ஜெமிலி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக மருத்துவமனை டாக்டர்கள்

தெரிவித்துள்ளனர். இதற்கிடையே, போப் ஆண்டவர் நலம் பெற வேண்டி உலகம் முழுவதும் உள்ள ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் சிறப்புப் பிரார்த்தனை நடத்தி வருகின்றனர்.

## நேபாள மன்னரின் ஆட்சிக்கலைப்புக்கு
## முன்னாள் அரசியல் வாதிகள் கண்டனம்

(காத்மாண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட்கள் அழைப்பு விடுத்த கர்த்தாலுக்கு திற்கு சுமாரான ஆதரவு கிடைத்தது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் எந்தப் பாதிப்பும் இல்லை.

நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் துபாவின் ஆட்சியை நீக்கச் செய்து மன்னர் ஞானேந்திரா நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்தார். நிர்வாகத்தில் தனக்கு ஆலோசனை வழங்க 10 அமைச்சர்களை நியமித்தார். தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டு பத்திரிகைகளுக்கு கடுமையான தணிக்கை முறை அமுலில் உள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு உள்ளனர். இதனால் கட்சி அலுவலகங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

மன்னர், அரசியல் கட்சி தலைவர்கள், தீவிரவாதிக்ள் ஆகிய மூன்று அதிகார மையங்கள் இடையே நேபாள மக்கள் சிக்கித் தவிக்கின்றனர். சீனப் பாணியில் கம்யூனிஸ்ட் அரசை ஏற்படுத்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் போராடி வருகின்றனர். கடந்த 1996க்கு பிறகு இந்த போராட்டத்தில் 11 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர்.

அவர்களைக் கட்டுப்படுத்த பல முயற்சிகள் நடந்தன. அரசியல் தலைவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைத்தனர். உண்மையான அதிகாரம் மன்னர் கையில் தான் உள்ளது. மன்னர் அல்லது அவரின் நேரடி பிரதிநிதியுடன் மட்டுமே பேச்சு நடத்துவோம் என மாவோயிஸ்ட் தலைவர்கள் மறுத்து விட்டனர். தற்போது மன்னர் ஞானேந்திரா மூன்று ஆண்டுகளுக்கு ஆட்சியை நேரடியாக ஏற்று இருக்கிறார்.

அவரால் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள் பேச்சுவார்த்தைக்கு வருமாறு மாவோயிஸ்ட்களுக்கு அழைப்பு விடுத்தனர். இதை நிராகரித்து மூன்று நாள் கர்த்தால் நடத்த தீவிரவாதிகள் அழைப்பு விடுத்தனர். தகவல் தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டு பத்திரிகை தணிக்கை இருப்பதால் பொதுமக்கள் கருத்துப் பரிமாற்றம் செய்வதில் தடங்கல் ஏற்பட்டு உள்ளது. கர்த்தாலுக்கு நேற்று முன்தினம் ஓரளவு ஆதரவே



காணப்பட்டது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் எந்தப் பாதிப்பும் இல்லை. பேச்சுவார்த்தைக்கு மாவோயிஸ்ட்கள் இணங்காவிட்டால் மாற்று நடவடிக்கையில் இறங்குவோம் என கல்வி அமைச்சர் ராதாகிருஷ்ணா மைனாலி அரசு வானொலி மூலம் அறி வித்தார். மன்னரின் நடவடிக்கைகளை முன்னாள் பிரதமர்கள் ஷெர் பகதூர் துபா, கிரிஜா பிரசாத் கொய்ராலா. உட்பட பலர் கண்டனம் செய்துள்ளனர்.

## தெருவில் 22 அடி திடீர் குழி;
## கவுந்தப்பாடியில் பரபரப்பு

(கவுந்தப்பாடி)

கவுந்தப்பாடி அருகேயுள்ள கிராமத்தில் 22 அடி ஆழத்தில் ஏற்பட்ட திடீர் குழியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. கவுந்தப்பாடி அருகேயுள்ளது பூலுவப்பட்டிக் கிராமம். கடந்த 31மற்றும் 1ம் தேதி இக்கிராமத்தில் நல்ல மழை பெய்தது. மண் ஈரப்பதமாக இருந்தது. கடந்த 2ம் தேதி இரவு இங்குள்ள நடுவீதியில் மசக்கவுண்டன் வீட்டுக்கு அருகில், திடீரென மூன்று அடிவிட்டமுள்ள குழி தோன்றியது. 22அடி ஆழம் கொண்ட இக்குழியின் உட்பகுதி ஆறு மீற்றர் சுற்றளவில் உள்ளது.

# இந்தியாவில் களமிறங்குகிறது பாக். அணியில் புதுமுகங்களுக்கு வாய்ப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியப் பயணத்துக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் புதுமுகங்கள் நிறையப் பேர் இடம் பிடிக்க போட்டி போடுகின்றனர்.


பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்ததாக, இந்தியப் பயணம் வருகிறது. முக்கியமான இந்தத் தொடர் தொடங்கும் முன்னதாகவே அந்த அணிக்கு ஒரு பிரச்சினை. முன்னணி வீரர்கள் நிறையப் பேர் காயம் காரணமாக கஷ்டப்படுகிறார்கள். அணித்தலைவர் இன்சமாம், துணைத் தலைவர் யூசப் யோகனா இவர்கள் பரவாயில்லை. பந்து வீச்சைப் பொறுத்த வரை, வேகப்பந்து வீச்சாளர்கள் சோயப் அக்தர், முகமது சமி, ஷபிர் அகமது, உமர் குல் ஆகிய நான்கு பேரும் காயத்தால், தற்போது ஓய்வெடுக்கின்றனர். இந்தியப் பயணத்தைப் பொறுத்த வரை, பந்து வீச்சில் அதிக கவனம் செலுத்த பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகம் விரும்புகிறது. முன்னணி பந்து வீச்சாளர்கள் காயத்தால் கஷ்டப்படுவதால், அங்குள்ள புதுமுக, இரண்டாம் நிலை வீரர்களுக்கு அடித்தது லக்கி பிரைஸ். இளம் வேகப்பந்து வீச்சாளர் ஷாகித் நசீர், ஸ்பின்னர் அர்ஷாத் கான் இருவரும் அணியில் இடம் பிடிக்க ஆயத்தமாகி விட்டனர். இதில் அர்ஷாத் இடம், ஏறக்குறைய உறுதியாகி விட்டது.

அனுபவம் வாய்ந்த அர்ஷாத் கானுக்கு வயது 33. எட்டு டெஸ்ட் போட்டிகளில் 30 விக்கெட் வீழ்த்தியிருக்கிறார். வாய்ப்பில்லாத நிலையிலும், உள்ளூர் போட்டிகளில் கலக்குகிறார்.

இந்திய ஆடுகளங்கள் ஸ்பின்னுக்குச் சாதகமாக இருக்கும் என்பதால், டேனிஷ் கனேரியா தவிர, கூடுதலாக ஒரு ஸ்பின்னரை அணியில் சேர்க்க பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக்குழு முடிவெடுத்துள்ளது. ஆக, அணியில் இடம் பிடிக்கும் வாய்ப்பு அர்ஷாத்துக்கு பிரகாசம்!




# காலிறுதியில் எலினா



(டோக்கியோ)

பான் பசிபிக் டென்னிஸ் தொடர் காலிறுதிக்கு எலினா டெமன்டீவா முன்னேறியுள்ளார்.


முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் பான் பசிபிக் டென்னிஸ் தொடர், ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடக்கிறது.

நேற்று முன்தினம் மோதல்களில் ரஷ்யாவின் எலினா டெமன்டீவா 6-2, 6-2 என்ற நேர் செட்டுகளில் ஜப்பான் வீராங்கனை அகிகோ மோரிகமியை வீழ்த்தி, காலிறுதிக்கு முன்னேறினார்.

# தடையில் இருந்து தப்பினார் இன்சமாம்

(லண்டன்)

ஐ. சி. சி. , (சர்வதேச கிரிக்கெட் சபை செய்த தவறினால்,



தடையில் இருந்து தப்பினார் பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக்.

அவுஸ்ரேலியாவில் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. செவ்வாயன்று பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி பந்து வீசி முடிக்க, நிர்ணயிக்கப்பட்டதை விட, அதிக நேரம் எடுத்துக் கொண்டது.

இதற்காக, அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக் போட்டி ஊதியம் முழுவதையும் அபராதமாக விதித்தார் ஐ. சி. சி. , மேட்ச் ரெப்ரி கிறிஸ் பிராட்.

கடந்த 12 மாதங்களில் இந்தத் தவறை இன்சமாம் இரணடாவது முறையாகச் செய்கிறார். ஐ. சி. சி. , விதிகளின் படி, 12 மாதங்களுக்குள் அணித் தலைவர் இதே தவறைத் தொடரும் பட்சத்தில், அடுத்த போட்டியில் விளையாடும் தகுதியை அவர் தானாகவே இழக்கிறார்.

# பிரிமியர் கால்பந்து செல்சியா வெற்றி!

(லண்டன்)

பிரிமியர் லீக் கால்பந்து



தொடரில் செல்சியா, பிளாக்பர்ன் ரோவர்ஸ் அணியை வீழ்த்தியது. இதன் மூலம் செல்சியா அணி, கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. முன்னணி கழக அணிகள் மோதும் பிரிமியர் லீக் கால்பந்து தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் செல்சியா, பிளாக்பர்ன் கழகங்கள் மோதின. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் செல்சியாவின் அர்ஜென் ரூபன் முதல் கோல் அடித்தார். இதை சமன் செய்ய போராடிய பிளாக்பர்ன் அணிக்கு இறுதியில் தோல்வியே மிஞ்சியது. இந்த அணி 0-1 என்ற கோல் கணக்கில் செல்சியா அணியிடம் வீழ்ந்தது. இந்த வெற்றியின் மூலம் செல்சியா அணி சம்பியன் பட்டம் வெல்லும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இத்தொடரில் 25 போட்டிகளில் விளையாடியுள்ள இந்த அணி 64 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் உள்ளது.

# சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விபரங்கள்

**அறிக்கை:-**

அண்மையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாகக் கல்முனைப் பிரதேசத்தில் பல ஊடகவியலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அம்பாறை, மட்டக்களப்பு பிரதேச தமிழ், சிங்கள ஊடக அமைப்புக்களும், சிறிலங்கா முஸ்லிம் மீடியா போரமும் புரவலர் ஹாசிம் உமர் அவர்களும் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளனர். இதனை நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

பல அரசியல் அதிகாரிகளின் உயர்வுக்கு ஏணியாகவும், தோணியாகவும் பாடுபட்ட பாதிக்கப்பட்ட இவ்வூடகவியலாளர்களை அரசியல் வாதிகள் எவரும் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளையோ, அல்லது அவர்களால் முடிந்த நிவாரண உதவிகளையோ வழங்காமையையிட்டு நாம் மிகுந்த கவலையடைகின்றோம்.

சுனாமி அனர்த்தம் காரணமாக உண்மையாகப் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அமைதியாக இருக்கும் போது சுனாமி அனர்த்தத்தைப் பற்றி அறிந்திராத அதன் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட தமது வீடுகளுக்குள் புகுந்திராத கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த சில ஊடகவியலாளர்கள் தாமும் பாதிக்கப்பட்டதாகக் கூறிக் கொண்டு பத்திரிகை வாயிலாகவும், ஏனைய நிறுவனங்கள் வாயிலாகவும் உதவிகள் பெற முற்படுவது குறித்து நாம் மிகுந்த மனவேதனை அடைகின்றோம். மனித தர்மத்திற்கு ஒவ்வாத இக்காரியங்களில் இருந்து அவர்கள் விலகி நின்று தமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை உண்மையாகப் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பார்களாக இருந்தால் அது பெரும் தர்மமாகக் கருதப்படும்.

பத்திரிகைகளில் பாதிக்கப்படாத பல ஊடகவியலாளர்களின் பெயர்கள் வந்து கொண்டு இருப்பதனால் உண்மையாகப் பாதிக்கப்பட்ட ஊடக வியலாளர்களின் பெயர்களை வெளியிட வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

**பெயர் விபரம் வருமாறு:-**

01. பீ.எம்.எம்.ஏ.காதர், மருதமுனை. இவர் தனது வீடுவாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடையின்றி நிர்க்கதியான நிலையில் மருதமுனையில் உள்ள அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளார். இவர் வீட்டின் அத்திவாரத்தைச் சுனாமி அலைகள் கொண்டு சென்றுள்ளன.

02. க.குணராசா, கல்முனை. இவர் தனது வீடு வாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் கல்முனையில் உள்ள தனது உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார். இவர் தினகரன் பத்திரிகையின் செய்தி ஆசிரியராக உள்ளார்.

03. ஏ.எல்.எம். சலீம், நிந் தவூர். நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் விடுதியில் வசித்து வந்த இவர் தனது அனைத்து உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் நிந்தவூரில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

04. ஏ.எல்., ஜுனைதீன், சாய்ந்தமருது. இவர் தனது வீடுவாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப் பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் சாய்ந்தமருதில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

05. ஏ.எல்.எம். முக்தார், சாய்ந்தமருது. இவர் தனது வீடு வாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் சாய்ந்தமருதில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

06. எம்.ஐ.எம். சம்கதீன், சாய்ந்தமருது. இவர் தனது வீடுவாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் சம்மாந்துறையில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

07. யூ.சம்கதீன், கல்முனைக்குடி. சுனாமி அனர்த்தத்தினால் உடமைகளை இழந்த இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

08. எம்.எம். ஜெஸ்மின், கல்முனைக்குடி. சுனாமி அனர்த்தத்தினால் உடமைகளை இழந்த இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

09. ஏ.ஜே.எம். சமீம், கல்முனைக்குடி. சுனாமி அனர்த்தத் தினால் உடமைகளை இழந்த இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

10. எஸ்.துஸ்யந்தன், பாண்டிருப்பு. இவர் தனது வீடுவாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடைஇன்றி நிர்க்கதியான நிலையில் கல்முனையில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

11. ஏ.எம்.அஷ்ஹர், மாளிகைக்காடு. இவர் தனது வீடுவாசல்களையும், உடமைகளையும் இழந்து உடுப்பதற்கு உடை இன்றி நிர்க்கதியான நிலையில் சாய்ந்தமருதில் உள்ள உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

12. ஏ.எம்.புஆது, நிந்த வூர். சுனாமி அனர்த்தத்தினால் உடமைகளை இழந்து இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

13. எம்.சகாப்தீன், நிந் தவூர். சுனாமி அனர்த்தத்தினால் உடமைகளை இழந்த இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

14. ஏ.எம்.எம்.பூமுதீன். சுனாமி அனர்த்தத்தினால் உடமைகளை இழந்த இவர் உறவினர் வீட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

**கல்முனை ஊடகவியலாளர் ஒன்றியம்**

இவர்களைத் தவிர கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பிரதேசகளில் உள்ள எந்தவொரு ஊடகவியலாளர்களும் பாதிக்கப்படவில்லை என உறுதிப்படுத்துகின்றோம்.

இது பற்றி மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் விபரங்கள் அறிவதற்கு ஈழநாதம் தயாராக உள்ளது.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

## சிந்தனைக்கு



சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருக்க வேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக்குப் பெற்றோம். செயல் தான் நமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
மின்னஞ்சல் :- batti@eezhanatham.com
தொலைபேசி :- 065-2226110
05-02-2005

## முஸ்லிம் சமூகம் உணர வேண்டிய காலமிது

தமிழர் தாயகத்தில் ஆழிப் பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கான அனர்த்த நிவாரணப் பணிகளில் அரசு காட்டி வரும் அக்கறையற்ற தன்மை வடக்கு கிழக்குக்கு தனியான நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று தேவைப்படுகின்றது என்பதை தெளிவாகக் காட்டியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் காட்டிய ஆர்வத்தையும் அரசு மீது மேற்கொண்ட அழுத்தத்தை புறக்கணித்து வந்த நிலையில் திடீர் என ஏற்பட்ட சுனாமிப் பேரலையினால் தமிழர் தாயகம் சிதைந்து கிடக்கின்றது.

தமிழ் பேசும் சமூகம் முழுமையான பாதிப்பையும் அவலங்களைக் கண்டு கலங்கி நிற்கின்றனர். கரையோரக் கிராமங்கள் இயற்கை அனர்த்தத்தால் அழிக்கப்பட்டு கடற்தொழில் வளம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

சர்வதேச சமூகத்திடமிருந்து வரும் அத்தனை உதவிகளும் சிறிலங்கா அரசு ஊடாகவே பகிரப்பட வேண்டும் என்பதில் அவர்கள் ஒற்றைக் காலில் பிடிவாதமாக நிற்கின்றனர்.

ஆனால் தமிழ் பேசும் மக்களுக்கான அரசின் அனர்த்த நிவாரணம் உரிய முறையில் பகிரப்படவில்லை என்பது தெளிவாகப் புரிகின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆழிப்பேரலை அழிவுகளைப் பார்வையிட வந்த ஐ.நா. செயலர் உட்பட பல அதிகாரிகளை வடக்குக் கிழக்குக்குள் செல்லவிடாது அரசு தடை விதித்த போதும் தாயகத்திற்குச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டவர்கள் அரசின் நடவடிக்கைகளையும் அரசு எவ்வாறு தமிழ் பேசும் மக்களுக்கான நிவாரண நடவடிக்கை மேற் கொள்கிறது என்பதை அவதானித்துள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக நிவாரணப் பணிகள் வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்படுவதாயின் அது விடுதலைப் புலிகளுடன் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அதன் மூலமே மேற்கொள்ள வேண்டும் என்பதில் சர்வதேச பிரதிநிதிகள் ஆர்வமாய் உள்ளனர். ஆனால் ஆளும் தரப்பு வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து ஒரு நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுவதை விரும்பவில்லை.

இந்த நிலையில் தமிழ் தாயகத்தில் தமிழ் பேசும் சமூகத்துக்கான ஒரு தனியான நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் தேவை என்பது தற்போது வெளிப்படையாகத் தெரிகிறது.

அரசியல் ரீதியாக பிரச்சினைக்குத் தீர்வு காணாது இழுத்தடித்து வரும் சிறிலங்கா அரசு இயற்கையால் அழிந்து கிடக்கும் தேசத்தைப் புனரமைப்புச் செய்வதற்கும் பாரபட்சத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் அரசின் நிவாரணப் பகிர்வில் அரசின் பாரபட்சத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசமான மாளிகைக்காடு, கல்முனைக்குடி, நிந்தவூர், சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் இந்த எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சிறிலங்காவின் ஆட்சி அதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறிய தினத்தை சுதந்திர தினமாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொண்டாடிய நேற்றைய தினத்தில் முஸ்லிம் மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

தமிழ் மக்களின் உரிமைகள் சிங்களப் பேரினவாத அரசுகளால் மறுதலிக்கப்பட்டதன் விளைவாக தமிழ் அரசியல் தலைவர்கள் நடத்திய அறவழிப் போராட்டம் எல்லாம் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்ட நிலையிலேயே ஆயுதப் போராட்டமாக தமிழின விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனவே முஸ்லிம் தலைமைகள் இன்னும் சிங்களப் பேரினவாத அரசுகளை நம்பியிருப்பதில் பயனில்லை என்பதை ஆழிப் பேரலை அனர்த்த நிவாரணப் பகிர்வில் புரிந்திருக்க முடியும்.

எனவே எதிர்காலத்தில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு முஸ்லிம் சமூகங்களும் இணைந்து தமது முழுமையான ஆதரவை வழங்க முன்வரவேண்டும்.

## அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடைக்கு தொழிலாளர்கள் இல்லை; விவசாயிகள் திண்டாட்டம்

(வி.பி.சிவப்பிரகாசம்)

அம்பாறை மாவட்டத்தில் பரவலாக பெரும்போக நெல் அறுவடை வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆனால் அறுவடை வேலைகள் செய்வதற்கு போதுமான தொழிலாளர்களை எடுக்க முடியாது விவசாயிகள் திண்டாட வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதோடு மிகவும் கூடுதலான பணத்தை விரயம் செய்து நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்தி அறுவடை செய்ய வேண்டியுள்ளதாக இருக்கிறது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தில் பல வருடங்களுக்குப் பின்பு மிகவும் கூடுதலாக 66,963 விஸ்தீரணமுள்ள ஹக்டயர், நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் ஆகிய காலத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின் போது பல பகுதிகளில் அதிகமான வயல் நிலங்கள் நாசமடைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலையின்போது, அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் விளைந்த வயல் நிலங்களில் கடல் நீர் கலந்ததினால் அதிகமான ஏக்கர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டது.

அதன் பின்பு "அறக்கொட்டி" எனும் பூச்சியின் தாக்கத்தினால் அதிகமான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டு இவைகளுக்கு தாக்குப் பிடித்து விளைந்துள்ள நெல்லை உரிய வேளையில் அறுவடை செய்ய முடியாத ஒரு நிலைமை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சுனாமியால் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்திலுள்ள 11 பிரதேசங்கள் பாதிக்கப்பட்டது. இப்பகுதியில்தான் அறுவடை செய்யக் கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அகதிகளாகி நலன் புரி நிலையங்களில் தங்கவைக்கப் பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## ஆடம்பரமின்றி வவுனியாவில் சிறிலங்காவின் சுதந்திர தினம்

(நமதுநிருபர்)

சிறிலங்காவின் 57வது சுதந்திர தின நிகழ்வு நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் ஆடம்பரமின்றி இடம் பெற்றது. காலை 9.08 மணியளவில் தேசிய கீதம் ஒலிக்க சிறிலங்காவின் தேசியக் கொடியினை வவுனியா மாவட்ட அரச அதிபரும் மாகாண கொடியை வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த பண்டார பத்தேவலவும்,மா வட்டக் கொடியினை கேணல் ஆர்.வி. சேனாநாயக்காவும் ஏற்றி வைத்தார். பின்னர் மதத் தலைவர்களின் ஆசியுரை இடம்பெற்றது. பின் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை மாவட்ட அரச அதிபரும், வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி மிஸ்கினும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வுக்கு பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் மற்றும் சிறிய தொகையிலான மாணவர்களும், மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்களும் கலந்து கொண்டனர். வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச சேவையிலுள்ள பெண்களுக்கு விடுமுறைக்கான சலுகை அதிகரிப்பு

(நமது நிருபர்)

அரச சேவையிலுள்ள பெண் உத்தியோகஸ்தர்களின் விடுமுறைக்கான சலுகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றுநிருபம் தற்சமயம் வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை இரண்டு பிள்ளைகளுக்கு மாத்திரமே பெண்களுக்கு முழு வேதனத்துடனான 84 நாட்களுக்கான பிரசவ விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இது தற்போது அனைத்து பிள்ளைகளுக்கும் வழங்கப்படவுள்ளது. இதற்கப்பால் தேவை ஏற்படின் மேலதிகமாக 84 நாட்கள் அரச வேதனத்துடனான விடுமுறையினையும், பெற்றுக் கொள்ள இந்த சுற்று நிருபம் வெளியேற்றப்படுத்தியுள்ளது.

## வவுனியாவில் நெருப்புக் காய்ச்சல் நோய்

(நமது நிருபர்)

வவுனியாவில் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து மக்கள் கொதித்தாறிய நீரைப் பருகுமாறு மாவட்டத்தின் சுகாதாரப் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முடிவடைந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் சுமார் 72 பேர் நெருப்புக் காய்ச்சலுக்கு உள்ளாகி இருக்கின்றார்கள். பெரும்பாலும் இந்த நோய் பட்டக்காடு மற்றும் பண்டாரிக்குளம் ஆகிய இடங்களில் பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 41வது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

(துஷி)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமி பேரலையால் உயிர்நீத்தவர்களின் 41வது நாள் நினைவு நிகழ்வு நேற்று அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களில்நடைபெற்றது.

காரைதீவு, கல்முனை, திருக்கோயில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவிலுள்ள இந்து ஆலயங்களில் விஷேட பூசைகளும், அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இவ்வொழுங்குகளை அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு உயிரிழந்த தமது உறவுகளுக்கு ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

## சிறுவர் கழக மாதாந்த குதூகல நிகழ்வு

(சக்திவேல்)

போரதீவுப்பற்று பிரதேசத்தில் பி.பி.டி.ஆர்.ஓ.ஓவின் அனுசரணையில் இயங்கிவரும் சிறுவர் கழகங்களுக்கிடையிலான மாதாந்தக் குதூகலம் நிகழ்வு அண்மையில் களுமுந்தன்வெளிப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. களுமுந்தன்வெளி தமிழிசை சிறுவர் கழகத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மண்டூர் இளந்தளிர், திக்கோடை அறிவொளி, 40 ஆம் கிராமம் வளர்பிறை, காக்காச்சிவட்டை இளங்குயில் ஆகிய சிறுவர் கழகங்கள் கலந்து கொண்டன.

இக்குதூகல நிகழ்வில் சிறார்களின் நாடகங்கள், பாடல்கள், கதை கூறல் என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பி.பி.டி.ஆர்.ஓவில் நிறுவன ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஹரிசிறுவர் இல்லம் மூலம் பாடசாலைக் கொப்பிகள்

பாதிக்கப்பட்ட வசதி குறைந்த மாணவர்களுக்கு யாழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் ஹரி இல்லம் சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று பாடசாலை அதிபர் திரு.வ.சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## சுகாதார தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதால் முகாம்களில் சுகாதாரச் சீர்கேடு

(விரிசகாதேவராஜா)

சுகாதாரத் திணைக்களத்தினால் காரைதீவுப் பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்ட இரு சுகாதார தொழிலாளர்களும் கடந்த ஒருவார காலமாக கடமைக்கு வராமையினால் முகாம்களில் துர்நாற்றம் எடுக்கத் தொடங்கின.

குறிப்பிட்ட சுகாதாரத் தொழிலாளர்களுக்கான கொடுப்பனவை நிறுத்தியமையே அவர்கள் கடமைக்கு வராத காரணம் எனக் கூறப்படுகின்றது. இதனால் காரைதீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நான்கு முகாம்களிலுள்ள கழிவறைகள் சிரமமாக சுத்தம் செய்யப்படுவதில்லை. அதனால் நாற்றம் எடுக்க ஆரம்பித்துள்ளது.

சுகாதார அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டுமென சுனாமி நிவாரண செயலணிக் குழுவின் தலைவர் ஜே.கே.பிரான்சிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவே ளை பிரதேசத்தின் ஏனைய பகுதிகளுக்கென நியமிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் தொடர்ந்து கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்குக் கொடுப்பனவு நிறுத் தப்படவில்லையா? சுனாமியிலும் பாரபட்சம் காணப்படவில்லை என விசனம் தெரிவிக்கப் படுகின்றது.

## பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள்

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஏறாவூர் சமூக அபிவிருத்தி மன்றம் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் என்பவற்றை வழங்கியுள்ளனர்.

ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம, சாகிர் மௌலானா வித்தியாலயம், அல்அஷ்ரப் வித்தியாலயம், றூகம் வித்தியாலயம், றஹ்மானியா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சுமார் 1இலட்சம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் எழுது கருவிகள் என்பனவற்றை வழங்கியுள்ளனர்.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# தற்கொலையா? கொலையா? சவுக்கடியில் சடலம் மீட்பு!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் சவுக்கடிப் பிரதேச மரமுந்திரிகைக் காட்டில் கழுத்தில் கயிறு இடப்பட்டு மரம் ஒன்றில் தொங்கிய நிலையில் காணப்பட்டு மீட்கப்பட்ட சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

65 வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நபர் இப்பிரதேசத்தை சேர்ந்தவர் அல்ல எனத் தெரியவருகின்றது.

சடலத்துக்கு அருகில் குளிசை வகைகள் மருந்துப் பொருட்கள் என்பன காணப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இவர் கடுமையான சுகவீனமுற்ற நிலையில் தற்கொலை செய்துள்ளார் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

# சுனாமி நிவாரணக் கொடுப்பனவு மீளப் பெற்றதாக மக்கள் முறையீடு

(வி.ரி.சகாதேவராஜா)

சுனாமி நிவாரணக் கொடுப்பனவுகளைப் பகலில் கொடுத்துவிட்டு இரவில் வீட்டைத்தட்டி எழுப்பி மீளப் பெற்றனராம்.

இச்சம்பவம் களுவாஞ்சிகுடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள குருக்கள்மடத்தில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குருக்கள்மட துறையடி வீதியைச் சேர்ந்த 15 பேர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மனித உரிமை ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் இரா. மனோகரனிடம் எழுத்து மூல முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

15 பேருக்கு சமையலுபகரணங்களை கொள்வனவு செய்ய ரூபா 2500 கொடுப்பனவும், ரூபா 375 நிவாரண முத்திரையும் வழங்கப்பட்டது.

31.01.2005 அன்று பகல் கையொப்பமிட்டு அப்பிரதேச கிராம சேவையாளர் மற்றும் சமுர்த்தி ஊழியர் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

அன்று நள்ளிரவு 12.00 மணியளவில் பிரஸ்தாப 15 பேரது வீடும் தட்டப்பட்டது அவர்களை எழுப்பி பகல் வழங்கிய கொடுப்பனவையும் முத்திரையையும் தருமாறு கேட்டுள்ளனர் அதன்படி திருப்பிக் கொடுத்துள்ளனர். இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளனர். உண்மையில் நிவாரணம் மோசடி செய்யப்பட்டதா? என்பதையறிய விசாரணை நடைபெறவுள்ளது.

# மட்டு. கிராம சேவையாளரின் வீட்டிற்கு கைக்குண்டு வீச்சு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டிற்கு கைக்குண்டு வீசுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வண்டிங்ஸ் வீதியில் உள்ள தணிகாசலம் எனப்படும் கிராம சேவையாளருடைய வீட்டின் மீதே இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. வீட்டிற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

மட்டக்களப்பின் எல்லைப்புற கிராமமான வெலிக்கந்தையில் நேற்று முன்தினம் துப்பாக்கி ரவைகள் மற்றும் விமான சுடுகலனுக்கான ரவைகள் வைத்திருந்தமை தொடர்பாக சிவிலியன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிங்களவரான இவரிடமிருந்து ரி-56 துப்பாக்கிக்கிக்குரிய ரவைகள் 750 கொண்ட பெட்டியொன்றும், 5.0 விமான சுடுகலனுக்கான ரவைகள் 80 கொண்ட பெட்டியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வெலிக்கந்தை பொலிசார் தெரிவித்தனர். வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமில் பணிபுரியும் இராணுவ சிப்பாய் ஒருவரே தன்னிடம் இதனை கொடுத்ததாக விசாரணைகளின்போது இந்நபர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இராணுவ பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவர் விசாரணையின் பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பாதாள உலகக் குழுவுடன் தொடர்புடையவரக்ளுக்கு விற்பனை செய்வதற்காக இவற்றை இராணுவ சிப்பாய் களவாடியிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவித்தனர். இவர்கள் இருவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சிறிலங்காவின் சுதந்திர தினத்தை ஆட்சேபித்து குடாநாட்டில் துக்க தினம்

(ஆ.கந்தசாமி)

சிறிலங்காவின் 57வது சுதந்திர தினமான நேற்று யாழ். குடாநாடெங்கும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம், மற்றும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் அழைப்பின் பேரில் இத் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது வீதிகள், பொது இடங்கள், யாழ். பல்கலைக்கழகம், தொழில் நுட்பக்கல்லூரி, தனியார் நிறுவனங்கள் என்பவற்றில் எல்லாம் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மரணவீடு போல் தோரணங்கள், கறிவாழைக்குலைகள் கட்டப்பட்டு சோக கீதங்களும் ஒலிக்கப்பட்டிருந்தன.

எனினும் யாழ் அரச செயலகம் மற்றும் இராணுவ முகாம்கள் ஆகியவற்றில் சுதந்திர தினத்தை ஒட்டி சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. இந்நடவடிக்கைகள் குறித்து சமூக நோக்கர்கள் பலரும் தமது ஆட்சேபங்களையும் அதிருப்திகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

**மட்டு...**

வில்லை எனவும் மாவட்ட செயலக அதிகாரி ஒருவரால் மேற்படி கொடி ஏற்றப்பட் டது. சுதந்திர தின நிகழ்வுகள் ஒன்றுமே இடம்பெறவில்லை என்று மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

அத்துடன் சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள், வர்த்தக ஸ்தாபனங்கள் வழமைபோல் இயங்க வேண்டும் என்றும் சுதந்திர தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்து கொண்டாட வேண்டும் என்றும் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தாலும் இன்றைய நாள் ஓர் துக்ககரமான தினம் போன்றே காட்சியளித்தது. அத்துடன் இராணுவச் சிப்பாய்களே அங்குமிங்கும் வீதிகளில் அலைந்து திரிந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

**தான்தோன்றீஸ்வரர்...**

கொக்கட்டிச்சோலை இராம கிருஷ்ண மிசன் த.க. பாடசாலை, மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம், முதலைக்குடா மகா வித்தியாலயம், முனைக்காடு விவேகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கொக்கட்டிச்சோலை ஆலய பிரத குரு உள்ளிட்ட குருமார்களும், ஆலய வண்ணக்கர்களும் மற்றும் பொது மக்களும் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# கல்முனை தமிழ் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலர் கோபாலரெத்தினம் இணைப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை (தமிழ்) பிரதேச செயலகத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்.

சுனாமி நிவாரண விடயங்களையும், மேலதிக நிருவாக கடமைகளையும் செய்வதற்காக அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபேதீரவினால் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே கல்முனை (தமிழ்) பிரதேச செயலாளராக வாசுதேவன் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

கல்முனை (தமிழ்) பிரிவில் 1270 பேர் சுனாமியால் பலியாகியுள்ளனர். இதுவரை 1116 பேருக்கு ரூ.15ஆயிரம் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 8 கிராம சேவையாளர்கள் விடுவிக்கப்பட்டு ஏனைய மூன்று பிரதேச செயலகங்களில் சுனாமி பணிகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

பொத்துவில், காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு தலா மூவரும், சாய்ந்தமருதுக்கு இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் என நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் தெரிவித்தார்.

கல்முனைப் பிரதேச அகதி முகாம்களில் இருப்போரை நிரந்தரமாக குடியேற்ற. அரசகாணி இல்லாதிருப்பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

# சிறிலங்காவின் சிங்கக் கொடிக்கு தீ மூட்டி எரிப்பு

(ஆ.கந்தசாமி)

யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள பரமேஸ்வரா சந்தியில் நேற்றுக்காலை 7.00 மணியளவில் இராணுவத்தினருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டது.

இது தொடர்பாக தெரியவருவதாவது, யாழ்பாணம் பரமேஸ்வரா சந்தியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் சிறிலங்கா சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து கறுப்புக் கொடியினை பறக்கவிட ஆத்திரமடைந்த இராணு வத்தினர் சிறிலங்காவினது தேசியக் கொடியை பறக்கவிட்டனர் பின்னர் யாழ். பல் கலைக்கழக மாணவர்கள் இத் தேசிய கொடிக்கு தீமூட்டி எரித்தனர்.

**பதிப்புறாதவர்களுக்கு...**

உபகரணங்களுக்கு எதுவித சேதமுமில்லாத காரணத்தினால் சமையல் உபகரண கொள்வனவுக்காக வழங்கிய ரூபா 2500 பெற்றுக்கொண்டோம் அவர்களது தொழில் பாதிக்கப்பட்டுள்ள காரணத்தால் தொழில்பாதிப்புக்குரிய 375 ரூபா முத்திரைகள் தற்போது எழுதும் பணி நடைபெற்று வருவதாகவும் இன்று இவை உரியவர்களிடம் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது இது தொடர்பாக எதுவித தகவலும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

**கல்முனையில்...**

தெரிவி க்கின்றனர்.

சம்பந்தப்பட்ட கிராம சேவகரின் அனுமதியுடன் மக்களுக்காக விடுதலைப்புலிகளால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருட்களை அதிரடிப்படை வழங்காது தடுக்க முனைவது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கைத்...**

சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து 9 எம்.எம்.ரக கைத் துப்பாக்கி மற்றும் சயனைட் வில்லைகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இவர்கள் இருவரும் தேச விரோதக் கும்பல் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் பாதுகாப்பின் நிமித்தம் பொலனறுவை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**நிவாரணத்தில்...**

ங்களில் அரசின் இந்த மாற்றாந்தாய்ப் போக்கைக் கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மேற்படி மாளிகைக்காடு, சாய்ந்தமருது, நிந்தவூர் பிரதேசங்களில் ஜும்ஆ பள்ளிவாசல்கள் முன்பாக இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் அவ்வப்பகுதி பிரதேச செயலகங்கள் வரை சென்றன.

"படுமோசமாகப் பாதிக்கப்பட்டது அம்பாறை கரையோரப் பிரதேசம் நிவாரணம் அம்பாந்தோட்டைக்கா?"

அம்பாந்தோடையில் புதிய குடியிருப்புப் பணி ஆரம்பம் அம்பாறை கரையோரப் பிரதேசத்திற்கு ஏன் இன்னும் இல்லை"


*"அரசின் புறக்கணிப்பா, எமது அமைச்சர்களின் எம்.பிக்களின் அசமந்தமா?"

*"எங்கள் மடியில் விழுந்த இடி அரசின் மடியில் விழுந்த அது பரிசா? எங்கே எங்கள் பங்கு"

*"சமாதானத்தில் ஓரங்கடட்பபட்ட முஸ்லிம்களுக்கு சுனாமி நிவாரணப் புனரமைப்புச் செயற்பாட்டிலும் புறக்கணிப்பா?"

*"மீனவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் எங்கே?" என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட சுலோக அட்டைகளை இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் ஏந்தி இருந்ததுடன் அதனைக் கோசமாகவும் எழுப்பினர்.

இதேவேளை சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் முன்றலிலிருந்து ஆரம்பமாகி நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான மையோன் முஸ்தபா மற்றும் எஸ். நிஜாமுதீன் ஆகியோரும் பங்கு கொண்டிருந்தனர்.




இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 05.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது